ஜகன்மோகினி

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்.

1—5—1949. 26-வது ஆண்டு. அணா நான்கு

இவ்விரு
இரத்தினங்களை
ஈன்றெடுக்க
இவர்களது
புனித அன்னை
என்ன நோன்பு
நோற்றாளோ!

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 JUL 1949
MADRAS

26-5

M49.26.5

ஐந்து ரூபாய்க்கு அரிய தமிழ் விருந்து.

வை. மு. ஸ்ரீ. 1–வது நவீனம் **உதய சூரியன்** . ரூ. 1-

1. மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம் 2. நாமகரணமும் காற்பத நி
ளும் 3. மங்களபுரியின் மூன்று திலகங்கள் 4. ஜீவியச் சுழலில் சோதனை
யின் கொடுமை 5. புயலும் அமைதியும் 6. குருகுல வாசமும் குமாரி
உள்ளமும் 7. ராஜ்யாபிஷேகமும் ராஜ்ய பாரமும் 8. காதல் போதனை—
கம்பன் வர்ணனை 9. எதிர்பாராத சம்பவம் 10. அதிர்ச்சியும் வைராக்யமு
11. இதய ஒலி 12. போர்க்களத்தில் மனப்போர் 13. உணர்ச்சி வெள்ளம்
14 இருண்ட வானம் 15. உதய சூரியன்.

வை. மு. ஸ்ரீ. 2–வது நவீனம் **மதமா, மனமா?** ரூ. 1–4.

1. சேற்றில் முளைத்த செந்தாமரை 2. அகமலர்ச்சியும் ஆபத்தும் 3. பரபரப்பும் பரிதவிப்பும் 4. வாழ்வும் தாழ்வும் 5. சோகமும் வேகமும் 6. இடியும் மின்னலும் 7. பிரசாரமும் விசாரமும் 8. அன்றும் இன்றும் 9. அலறலும் ஆறுதலும் 10. விழிப்பும் உழைப்பும் 11. விளம்பரமும் விபரீதமும் 12. மனக்கண்ணாடியே உலகம் 13. இன்னலைப் புன்னகைப் போம் 14. உயிர் நிலை—உயர் நிலை 15. பொருள்—அருள்—அமைதி 16. மனதின் சூக்ஷ்மாணுக்கள் 17. அருள் நிலத்தில் அமரானந்தப் பயிர் 18. அவனியில் யாவும் அவனாலே 19. காதல் விளக்கம்—அன்பின் தாயகம் 20. மதமா, மனமா?—மனத்திருவிளையாடல்.

வை. மு. ஸ்ரீ. 3-வது நவீனம்— **அவசரமூர்த்தியின்**
அபூர்வ டயரி ரூ. 1–8–0

நிதானகீர்த்தி தோகுத்து அளிக்கும் விவித விருந்து

1. நவீன ப்ரஹ்மதேவன் 2. நவீனங்களின் முன்னோர் 3. ச ...
இருக்கிறார்! 4. பிரமித்துவிட்டோம்! 5. கீர்த்தனைமணி! 6. ஒரு வ...
7. ஸர்வம் ஸங்கீதமயம் 8. இந்திரனின் புதல்வன் 9. ஸ்ரீ கிருஷ்ணம்ருச
10. கண்கொள்ளாக் காட்சி 11. அன்பின் ஆற்றல் 12. வாழ்வின் மேடு பள்ளங்கள் 13. எதிர்பாராத அநுபவம் 14. பொன் விழா 15. ஆறுதலும் கிளர்ச்சியும் 16. திருப்பதி யாத்திரை.

வை. மு. ஸ்ரீ. 4–வது நவீனம் **ராணி சீலாவதி** ரூ. 1–0–0

1. உபன்யாசமும் உதாசீனமும். 2. பேய்க்குக் கள் வார்த்த கதைதான்! 3. வாக்கு பலித்தது—விபரீத யாத்திரையே! 4. நிந்தனையும் நிபந்தனையும் 5. உவமையும் உவகையும். 6. வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்த இதழ். 7. மடமையும் கடமையும் — சூழ்ச்சியின் வீழ்ச்சி 8. இனம் இனத்தைச் சேரும்—துாபமும் தாபமும். 9. விதையும் அறுவடையும் 10. தியாகச் சிகரம்—கடமையின் புண்ணிய வடிவம் 11. சீலாவதியும் சிலாவதியும் 12. ராஜரிஷியின் இதய கீதம்.

ஷை நான்கு நவீனங்களையும் ஒரே சமயத்தில் வாங்குவோர் ரூ. 5. அனுப்பினால் தபாற்செலவின்றி ரிஜிஸ்தர் போஸ்டில் அனுப்பப்படும் தனியே வாங்குவோர் தமக்கு வேண்டிய புத்தகத்தின் விலையுடன் 4 அணா ரிஜிஸ்ட்ரேஷனுக்காக அனுப்பவும்.

ஜகன்மோகினி காரியாலயம்
26 தேரடித் தெரு, திருவல்லிக்கேணி.

OFFI... BOOKS
JUL 1949

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
- திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து
- வீராகவ கவி

Vol. 26.	விரோதி ஹூ,	சுதந்தா சகாப்தம்	May.
No. 5.	சித்திரை மீ	2௨-ம் திங்கள்.	1949.

பெருமிதமும் பூரிப்பும்

அஞ்சாத நெஞ்சுடைய மேரு—எங்கள்
அரசன் ஜவஹர்லால் நேரு
துஞ்சாத. பொதுநலத் தொண்டன்—அவன்
சொல்லைப் பணியுமிந்தக் கண்டம்

நேருஜியின் அமுத மொழிகளுக்கும் ஆழ்ந்த கருத்துக்களுக் ...ம் உலகெங்கும் விசேஷ மதிப்புண்டு. இது அவ்வப்போது தனி ...சோபையுடன் வெளியாகிறது. சென்ற டிஸம்பர் இதழில் ஆசியாவின் குரல் உலகின் ஞானக்குரலாக ஒலித்ததுபற்றிப் பெருமிதத்துடன் ...ிப்பிட்டோம். திருமபவும் நேருஜியின் தற்போதைய லண்டன் ... உலகின் கவனத்தைக்கவர்ந்திருக்கிறதுபற்றிப் பூரிக்கிறோம். ...காமன்வெல்த் பிரதமர்களுக்குள் இந்த சின்ன பெரிய மனி ...தான் மிகச் சிறந்த அறிவாளன். ஒரு சட்ட நிபுணனின் நுட் ...த்துடன் இவர் பெரும் பிரச்னைகளை எளிதாகவும் சரியாகவும் திறமையுடன் தீர்ப்பதைக் காண்கிறோம்... பொதுமக்களின் மேல் ...ாசகமாகவும், இதிகாஸ புருஷனாகவும் —காவிய நாயகனாகவும்— ...ந்திய நாகரிகத்தின் பிரதிமை திருஷ்டாந்தமாகவும் விளங்கு ...ிறார்......"—இவ்வாறெல்லாம் ஆங்கிலேய பத்திரிகைகள் நேருஜி ...யைச் சமீபத்தில் புகழ்ந்திருக்கின்றன. காமன்வெல்த்தின் வருங் ...ாலத்தை நிர்ணயிப்பதில் நேருஜியின் கருத்துக்களுக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு என்பது ப்ரத்யட்சமாகிவிட்டது.

"செல்வாக்கு அபரிமிதம்" என்று வேறொருவரைப்பற்றிச் சொல்லக்கூடுமாயின் அது தற்போது அமெரிக்க ஸ்தானீகராக நிய மிக்கப்பட்டுள்ள நேருஜியின் சகோதரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண் டிட்டைப்பற்றித்தான். ஐ. நா. சபையிலும், ரஷ்யாவிலும், தனக் ...த் தனி மதிப்பைத் தேடிக்கொண்டுள்ள ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியை ...ுதிய பதவியில் அமெரிக்க மக்கள் பெரும் உத்஢ஸாகத்துடன் வர ...வேற்கிறார்கள்.

ஒரு தாய் வயிற்றில் இவ்வாறு உலகப் பிரஸித்தியுடனும் செல்வாக்குடனும் கூடிய பிள்ளையும் பெண்ணும் பிறந்திருப்பது உலகத்துக்கே ஒரு புதுமை: இந்தியாவின் மிகப் பெரிய பெருமை.

அவ்விருவருடைய திருவுருவங்களை மேலட்டையில் தாங்கி வருவது மோகினியின் பாக்கியம். புன்முறுவல் பூத்த முகங்களைக் குதூகலத்துடன் வெளியிடுகிறோம். வருங்காலப் பிரஜைகள் இந்த உதாரண திலகங்களைக்கண்டு, அவர்தம் வாழ்வின் படிப்பினையை ஏற்று, நல்ல வழியில் முன்னேறுவார்களாக!

★

இணையற்ற வெற்றி

நேருவின் ராஜ தந்திரத்திற்கு இணையற்ற வெற்றி காமன்வெல்த் மகாநாட்டில் காணப்பட்டது. 27-4-49ல் பிரிட்டிஷ் பிரதமர் காரியாலயத்திலிருந்து வெளியான அறிக்கையிலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன: (1) காமன்வெல்த் உறவு அமைப்பானது நெகிழும் தன்மை வாய்ந்தது: பரஸ்பர நல்லெண்ண சினேகபாவ சூழ்நிலையே முக்கியம்: மாறுபட்ட நிலையிலும் ஐக்கியமே அடிப்படை. (2) இந்தியாவின் தலைவரின் ராஜதந்திரத்துக்கு இணையற்ற மதிப்பு உண்டு என்பது ப்ரத்யட்சம்.

இந்தியா குடியரசாகத் தீர்மானித்திருந்தபோதிலும் காமன்வெல்த்தில் ஒரு நபராகவே இருக்க விரும்பியது: இதனால் எழுந்த முக்கிய அரசியல் பிரச்னைகளைப்பற்றி ஆலோசித்து முடிவு செய்யவே இந்த காமன்வெல்த் மகாநாடு கூட்டப்பட்டது. எட்டு பிரதமர்கள் ஒருவாரம் கூடிப்பேசி முடிவு கண்டனர். 27ல் உத்யோக பூர்வமான அறிக்கை விடுத்தனர். அமைதிக்கும் சுதந்தரத்துக்கும் முன்னேற்றத்துக்கும் காமன்வெல்த்தில் சுதந்தர சம அந்தஸ்துள்ள பாகஸ்தர்களாக இருந்து ஒத்துழைத்து வேலை செய்வதென்று காமன்வெல்த் நாடுகள் இவ்வறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளன.

அறிக்கையின் முக்கிய ஸாராம்சமும், மேற்படி மகாநாட்டின் முக்கிய அம்சங்களும் வருமாறு:— புதிய அரசியலமைப்பின்கீழ் இந்தியா ஒரு சுதந்தரக் குடியரசு நாடாக வேண்டுமென்று இந்திய மக்கள் விரும்புவதாக இந்திய சர்க்கார் இதர சர்க்கார்களுக்குத் தெரிவித்திருந்தனர். தவிர, இந்தியா காமன்வெல்த்தில் ஒரு பூரண மெம்பராயிருக்க விரும்புவதாயும் காமன்வெல்த் உறவின் பாந்தவ்யத்தில் மன்னரின் அந்தஸ்தைச் சின்னமாக ஏற்று இதர நாடுகளுடன் உறவு கொள்ள விரும்புவதாயும் தெரிவித்திருந்தனர். இதைப்பற்றி ஆலோசித்து அபிப்ராயங்களைப் பரிமாறிக்கொண்ட இதர காமன்வெல்த் நாடுகள் நேருஜியின் ஆழ்ந்த கருத்துக்களைக் கவனித்து இந்திய அபிலாஷையை அங்கீகரித்தனர்.

இதன்படி குடியரசு இந்தியா காமன்வெல்த்தில் சம உரிமை பெற்ற மெம்பராக இருக்குமென்றும், இதர காமன்வெல்த் நாடுகளுக்கு அதிபதியாக இருக்கும் மன்னர்பிரானை இந்தியா சுயேச்சை சங்கத்தின் சின்னமென்றே கருதும். இதர 7 நாடுகளும் மன்னருக்கு விச்வாசப்பிரமாணம் செய்யும்; குடியரசான இந்தியா அத்தகைய விச்வாசப்பிரமாணமின்றி சம அந்தஸ்துள்ள பாகஸ்தனாக இருக்கும்; இந்தியாவைப் பொறுத்தவரையில் மன்னருக்கு ஒருவித

வேலையும் கிடையாது. மன்னரின் பிரதிநிதியாகவிருக்கும் கவர்னர் ஜெனரல் பதவி குடியரசு ஏற்பட்டதும் மறைந்துவிடும். இந்தியாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி மன்னரின் பிரதிநிதியாக இருக்கமாட்டார்: அவர் இந்திய மக்களின் ராஜ்யஸ்ரீயை—ராஜாங்க உரிமையை— பிரதிபலிப்பார்: இதுவரை உபயோகப்படுத்திவந்த டொமினியன் என்ற வர்ணனை இனி மறையும். ஆனால், காமன்வெல்த்தில் நமது பிரஜைகள் அனுபவித்துவரும் உரிமைகளையோ, நமது நாடு அனுபவிக்கும் ஏகாதிபத்ய சலுகைகளையோ இப்புது நிலைமை பாதிக்காது. மாறுபட்ட நிலையிலும் காமன்வெல்த்தின் ஐக்கியத்தைப் பலப்படுத்துவதையே அடிப்படையாகக் கொண்டு உடன்பாடு கண்டிருக்கின்றனர்.

காமன்வெல்த்தில் மன்னர் சம்பந்தமில்லாத மக்கள் – அரசாக சம பாத்யதையுடன்சேரும் முதல் நாடு இந்தியாதான். இது நம் நேருவின் காமன்வெல்த் உறவுக்கான புதுக்கொள்கையின் மாபெரும் வெற்றி. ஸ்தானாதிபதிகளை நியமிப்பதிலும், பிரகடனங்கள் வெளியிடுவதிலும், முக்கிய பத்திரங்களில் கையெழுத்திடுவதிலும் இனி நம் ஜனாதிபதியே பூரண பொறுப்பு வகிப்பார். இந்தியக் குடியரசுக்கு பிரிட்டிஷ் மன்னர் மன்னராக இருக்கமாட்டார்.

நேரு ஸ்தாபித்துவிட்டுவரும் இப்புதுஉறவு சர்வதேச அரங்கத்தில் எவ்விதம் பரிமளிக்குமென்பது போகப்போகத்தான் தெரியுமெனினும், இப்போதே புலப்படுவது யாதெனின், இதனால் பழைய சிநேகம் மறக்காமலிருக்குமென்பதும், நடு நிலைமை வகிக்கும் பெரிய வல்லரசாக இந்தியா இருந்து, யுத்தத்தில் சிக்காமல், சமாதானத்தை நிலை நாட்டத்தயாராயிருக்குமென்பதும்தான். வல்லரசு-அச்சு எதிலும் இந்தியா சேராது. சுதந்தரத்தின்மீதுள்ள ஆசையால் அது குடியரசாகிறது; பரஸ்பர நல்லெண்ணத்தையும் வசதியையும் உத்தேசித்து காமன்வெல்த்தில்—அதாவது பொதுநலச் சங்கத்தில்-அங்கத்தினராகவே இருக்கப் பிரியப்படுகிறது. அவ்வளவுதான். பர்மாவும் அயர்லாந்தும் காமன்வெல்த்திலிருந்து விலகி சுதந்தரக் குடியரசுகளாகிவிட்டதால் இப்போது பொதுநலச் சங்கத்தின் அங்கத்தினர்கள் பின்வரும் எட்டு நாடுகளே:—பிரிட்டன், கானடா, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஸிலோன், பாகிஸ்தான், இந்தியக் குடியரசு. இவர்களுடைய ஐக்கியத்தின் சின்னம் பிரிட்டிஷ் மகுடம்.

உற்றுநோக்கினால் பிரிட்டன் ஒரு மகுடமுள்ள குடியரசு என்றும், வருங்கால இந்தியா ராஜமுடியற்ற குடியரசு என்றும் புலப்படும். இப்புது உறவு ஆக்க, முன்னேற்ற நோக்கங்களுடன் செய்துகொள்ளப்பட்டுள்ளதென்றும், வெறும் ராணுவ அல்லது வியாபார ஒப்பந்தமல்லவென்றும் ஏற்படும். எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்ததுபோலுள்ளது ஜயப்பூர் காங்கிரஸின் அரசியல் தீர்மானம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதுதான். இந்திய மக்களின் கருத்துப்படியே முடிவுகண்டுகொள்ளப்பட்டுள்ளதானது இந்த எட்டு நாடுகளிடையே பரஸ்பர நல்லெண்ணத்தை வளர்க்கப் பெரிதும் பிரயோஜனப்படும்.

— வை. மு. ஸ்ரீ.

பெண் இனத்திற்கோர் பெருமை. ஸ்ரீமதி ரங்கப்ரியை

"திருக்கோளூர்ப் பெண்பிள்ளை"

இக்காலத்துப் பெண்மணிகளில் சிலர் பாரதம், இராமாயணம் இதிகாசபுராணாதிகளைப் பாட்டிக் கதையென்று கூறுவார்கள். பண்டைப் பெண்மணிகள் அவற்றையே ஆதாரமாகக்கொண்டு ஒழுகிவந்தார்கள்.

பண்டைப் பெண்மணிகளின் கல்வி அவர்களின் ஜன்மப்பிணியை நீக்கவும், ஆதியந்தமற்ற அனந்தஸ்வரூபியைக் கண்டு ஆனந்திக்கவும், பிற மக்களையும் அஜ்ஞானக் கடலிலிருந்து கரையேற்றவும், பகவானுக்குப் புனிதத்தொண்டுபுரியவும் உதவியது. அறிவைப் பெருக்கும் கல்விக் களஞ்சியமாகவும் தேசமக்களைச் சீர்திருத்தும் சிறந்த சிலவதிகளாகவும் விளங்கினர்கள் அப்பெண்மணிகள்.

இக்காலத்தில் மகாத்மா காந்தியடிகளுக்கு உத்தம சிஷ்யைகள் இருந்து உலகுக்குப் புனிதத்தொண்டு புரிந்ததுபோல் மஹாத்மா ராமானுஜருக்கும் அக் காலையில் அனேக மாதரசிகள் உத்தம சிஷ்யைகளாய் விளங்கினர். அவர்களில் முக்கியமானவர்கள் சிலர் ;— அத்துழாயம்மா, அம்மங்கியம்மா, ஆண்டாளம்மா, பொன்னாச்சி, தூய பெருந்தேவி, கொங்குப்பிராட்டி, விஜயரங்கவல்லி, திரிபுராதேவி — இன்னும் அனேகர்.

ராமானுஜரென்னும் எம்பெருமானாரிடம் பெரியபெரிய பூமான்களும் வாய்திறக்கப் பயப்படுகையில் ஓர் பெண்மணி, அதிலும் வரும் வழியில், அவரெதிரில் தைரியமுடன் பேசுவதென்றால், அப் பெண்மணியின் கல்வித் திறன் எத்தகையதென நம்மால் அளவிட்டுக் கூறமுடியுமா? சாதாரணமாய் அநேக கிரந்தங்கள் படித்து மனப்பாடம் செய்திருந்தாலும் திடீரென நினைவுக்குவருவது வெகுகஷ்டம். பெரியபெரிய வித்வாம்சர்களும் அம்மாதின் திறமையைக்கண்டு மெச்சும்படியாக அவ்வளவு அழகாகவும் திறமையுடனும் ஸ்ரீ பாஷ்யகாரருடன் சம்பாஷித்தாளென்றால், அவளது கல்வித்திறனை எவ்விதந்தான் புகழ்வது? இத்தகைய பண்டைப் பெண்மகளின் பெருமையும் கல்வித்திறனும் பெண்ணினத்திற்கே பெருமையை அளிக்கின்றது. இதை நாமும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் கூறலாமல்லவா?

* * * *

வெளிக்கிளம்புகிறான் உதயபாஸ்கரன் இருள் அரக்கனை விரட்டியடிப்பதுபோல். கமலமொட்டுகள் பாஸ்கரனை ஆராதிக்கக் கிளம்புவதைப் போல் மலர்ந்த முகத்துடன் விரிகின்றன. மறையோர்கள் தம் தம் நித்ய கர்மானுஷ்டானத்தை முடித்துக்கொண்டு வேதகோஷம் புரிகின்றனர். அவர்கள் கை குவிய ஆம்பலும் குவிந்தது. உழவர்கள் தங்கள் உழவுத் தொழிலுக்கேற்ற கலப்பை, நுகத்தடியுடன் ஆனினங்கள் சகிதம் தங்கள் தங்கள் தொழிலில் இறங்குகிறார்கள். அவ்வமயம் கருணையே உருக் கொண்டாற்போல் உருவெடுத்த, தனிவள்ளலாகிய ராமாநுஜதிவாகரர் தன் சிஷ்யக்கூட்டங்களுடன் வெளிக்கிளம்பி திவ்யதேசயாத்திரை செல்கின்றார். அப்படிப் போகும்போது வழியே திருக்கோளூருக்குச் செல்லும் பாதை குறுக்கிட்டது. அவ்வமயம் அவ்வழியில் திருக்கோளூரிலிருந்து திரும்பும் ஓர் பெண்மணி எதிரே வந்து தண்டனிட்டாள்.

ராமானுஜர், அம்மாதர் திலகத்தைப்பார்த்து, "அம்மா! நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று வினவியருளினார்.

அதற்கு அம்மாது "சுவாமீ! அடியாள் திருக்கோளூரிலிருந்து வருகிறேன்" என்றாள். "ஏனம்மா! ஒருவரிருக்கும் வீட்டில் பலர் நெருக்கமாயிருந்து காய்கிழங்குகளைப் புசித்தாகிலும் வைத்தமாநிதி எம்பெருமானை தரிசிக்கவேணுமென்று ஆழ்வார் கூறியுள்ளாரே! "திண்ணம் என் இளமான் புகுமூர் திருக்கோளூரே" என்றுபாடி இருக்க "எல்லாருக்கும்

புகுமூர் உமக்குப் புறப்படுமூராயிற்றே? நீங்களேன் இவ்வூரைவிட்டு வருகின்றீர்கள்?'' என்று வியந்து கேட்டனர் எம்பெருமானுர்.

அதற்கு அம்மங்கை, "ஸ்வாமி! அடியாள் எதற்குச்சமானம்? அங்கு குடியிருக்க அடியாளுக்கு என்ன விஷயம் தெரியும்?'' என்று கூறிவிட்டு "அடியாள் சுத்த அஜ்ஞானி; வயிறே வனவாசம், குடிலே கோவிந்தம்!'' என்று தன்னை வெகு இளப்பமாய்க் கூறிக்கொண்டாள். ஆனுல், அவ்வம்மை வெகு மேதாவி.

புராண இதிகாசங்களில், ராமாயணம் குருட்டுப் பாடம்; பாரதம் மனப்பாடம்; பாகவதம் கண்டபாடம்; அவ்வம்மைக்குத் தெரியாத இந்து தர்ம கிரந்தமே கிடையாது என்று தாராளமாய்க் கூறலாம். நமது தாய்பாஷையிலாகிய தமிழ் மறை—திராவிட வேதத்திலும் கரைகண்டவர்கள். இத்தகைய க்ரந்தங்களில் எவ்விடத்திலும் வித்வாசம்சாக்கள் கேட்டாலும் தங்குதடையில்லாமல் தகுந்த பதில் கூறும் ஆற்றல் படைத்தவர். இகபரசாதனங்களுக்கு ஏற்றது பண்டைப்பெண்டிரின் கல்வித்திறன் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்திருந்தாள் அப்பெண்மணி.

திருக்கோளூரம்மா சுவாமியை தண்டனிட்டு 'சுவாமீ! நாயிந்தே நாயிந்தே!' என்று கூறிக்கொண்டே இராமநுஜரும் பிரமிக்கும்படியாகப் பலவிஷயங்களைக் கூறலுற்ருர். ஒவ்வொன்றிலும் ஆழ்ந்த இதிகாஸ, புராண, ஸம்பிரதாயப் பொருள் பொதிந்துகிடந்தது. (தொடரும்)

மதிப்புரை

பக்தன்

[பக்தன் காரியாலயம். 16 சுக்குவார் தெரு, திருவல்லிக்கேணி சென்னை 5. —வருடம் நான்கு முறை வெளிவரும் ஆஸ்திக பத்திரிகை.— 48 பக்கங்கள். விலை அணா 4. ஸ்ரீ நம்பிள்ளை பிரபந்த பாடசாலையின் சார்பாக வெளியிடப்படுகிறது.]

விரோதி ஸ்ரீ புதுப் பஞ்சாங்கத்தில் வருட பலனைக் கூறுமிடத்தில் ஆஸ்திகப்பிரசாரம் அதிகரிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க ஆஸ்திக உலகை மகிழ்விக்க திருவல்லிக்கேணியிலிருந்து பக்தன் கிளம்பி இருக்கிறான். பக்திவளர்ந்தால் வல்லுயிர்ச்சாபம் நீங்கி, கலியும் கெடும் என்ற தாரக மந்த்ரத்துடன், ஸத் விஷயங்கள் பலபலதாங்கி இச் சித்திரைத் திங்களில் தனது தொண்டைத் துவக்கியுள்ளான்.

ஸ்ரீ. உ. வே. ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர வித்வான் காரப்பங்காடு வெங்கடாசார்யர்ஸ்வாமியை கௌரவ ஆசிரியராகவும், ஸ்ரீ. ம. ர. ஸம்பத் குமாரன், M. A. அவர்களை நிர்வாக ஆசிரியராகவும் கொண்டுள்ள இப்பத்திரிகை, ஸ்ரீ M. K. ரங்காசாரியரின் பெரு முயற்சியால் மிக அழகாக மலர்ந்திருக்கிறது. வித்வான் திருக்குடந்தை ஸ்ரீநிவாஸராகவாசாரியார், ஏ. என். பரசுராமன் M. A, ஜகன்மோகினி ஆசிரியை வை. மு. கோ. ஆகிய மூவரும் ஆலோசனையாளர்களாக இருந்து உதவுகிறார்கள்.

சித்திரை இதழ் ஆழ்வார்கள் வைபவத்துடன் ஆரம்பித்து, ஆசார்ய பிரபாவத்துடன் சிறப்பாக முடிவடைகிறது. திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமியின் படமும், அஹோபிலம், வானமாமலை ஜீயர் ஸ்வாமிகளின் படங்களும், மொத்தம் 12 கட்டுரைகளும் இவ்விதழை அலங்கரிக்கின்றன.

கௌரவ ஆசிரியரும் நிர்வாக ஆசிரியரும் தவிர, கீழ்க்கண்ட அறிஞர்களும் விஷயதானம் செய்துள்ளனர் : ஸ்ரீமான்கள் ரா. ஸ்ரீ. தேசிகன், M. A, ராவ்பகதூர் போ மு. ஸ்ரீநிவாஸய்யங்கார். B.A. M.L., வை.மு. ஸ்ரீநிவாஸன். M.A.B.L, வித்வான் தி.வீ. ராமகிருஷ்ணய்யங்கார், ஸ்ரீ-ஸ்ரீ-ஆசார்யா, வித்வான் பந்தல்குடி திருமலை அய்யங்கார், வித்வான் வானமாமலை கோபாலய்யங்கார், வித்வான் ஸ்ரீரங்கம் வி.டி. ரங்கஸ்வாமி ஐயங்கார், பண்டித திருவாலி ராமாநுஜாசாரியர்.

ரஸமான விஷயங்களைத் தெளிவாக எழுதியுள்ளார். மேற்கொண்டும் விவரங்களைக் கொடுக்காமல் நமது பக்திமான்களாகிய வாசக மஹாநீயர்களுக்கு பக்தனைக் கண்டு மகிழும்படி சிபார்சு செய்வதே உசிதம் என்று இத்துடன் நிறுத்திக்கொள்கிறோம்.

ஆஸ்திகர்களின் பேராதரவு பெருகுமாயின் பக்தன் பிரதிமாதமும் தொண்டுபுரியத் தயாராயிருப்பதாக நிர்வாகிகள் அறிவித்துள்ளார்கள். பக்தன் அருட்பொருளை உங்களுக்கு அளிக்கிறான்: நீங்கள் அவனுக்குப் பொருளை அருளி வைக்குங்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 JUL 1949
MADRAS

பி.ஸ்ரீ.

3. தொண்டன் யார்? நீசன் யார்?

சிவன்கோவிலில் ஒரு பட்டர் ஆசார அனுஷ்டானங்களிலே யாதொரு குறைவும் இல்லாமல் பூஜை செய்துகொண்டிருந்தார். சுவாமி முன்னே நைவேத்தியம் படைத்து ஆராதிக்கும்போது, 'சுவாமியே! இப்படியே உட்கொண்டு அருளவேணும்' என்று உள்ளபடியே ஆசைப்படுகிறரோ என்று தோன்றும் ஆராதனைக்கு உதவியாக அருகில் நிற்பவருக்கு. திரை விலகியதும் வெளியே நிற்கும் 'பக்தை'களுக்கு, 'இந்தப் பட்டர் நிவேதனம் செய்யும்போது சுவாமி சும்மா இருக்க முடியுமா? ஏதாவது கொஞ்சம் சாப்பிட்டுத்தான் இருப்பார்!' என்று எண்ணத் தோன்றும். லௌகிகம் தெரிந்த பக்தர்கள்கூட 'நம்ம பட்டர்சாமி நிவேதிக்க, நடராஜ சுவாமி ஆவியையாவது சாப்பிட்டுத்தான் இருக்கவேணும்' என்று பேசிக் கொள்வார்கள். சுருக்கச்சொன்னல், 'அவர் நடராஜ சுவாமி, இவர் நடமாடும் சுவாமி!'—தரிசனத்திற்கு வந்தவர்களுக்கெல்லாம். ஊரெல்லாம் இவரைப் 'பெருந்தொண்டர்' என்று போற்றியது.

இப்படியிருக்க, ஒருநாள் நடராஜாவுக்கு இந்த நடேசபட்டர் வழக்கம் போல் வடமொழி மந்திரங்களுடன் நைவேத்தியம்செய்து, பிறகு 'அப்பனே! கூத்தாடும் தேவா! அங்கீகரித் தருளவேணும் இந்த அமுதினை; அமுது செய்தருள்க' என்று வாயார மனமாரத் தமிழிலும் சொல்லி விட்டாராம். சொன்னல் என்ன? என்ன ஆபத்து வந்துவிடப்போகிறது? ஆனல், கூத்தாடும் தேவர் கைநீட்டி அமுதுசெய்யத் தொடங்கி விட்டாராம். ஆபத்து வந்துவிட்டதாகவே பட்டர் நினைத்துவிட்டாராம். 'ஐயோ குடி கெட்டுப்போச்சே! வேண்டாம் சுவாமி! என் குழந்தைகுட்டிகள் பட்டினி யாகிவிடுமே!' என்று கதறினராம். இப்போது சொல்லுங்கள், 'இவர் தொண்டர் தாமா?' என்று. இந்தக் கதை பரவியதும் ஊரெல்லாம் பழித்தது.

பிள்ளையார் தமக்கு முன் படைத்திருந்த உணவுப்பொருள்களை உண்ணத்தொடங்கியதும் சந்தோஷமடைந்தாராம் ஒரு பிரசித்தரான சிவ பக்தர். அத்தகைய அற்புதம் நிகழ்ந்ததே ஒரு பக்திப்பெருஞ்சான்ருகி விட்டது. ஆனல், இந்தப் பட்டினிப் பட்டரின் கதி என்ன?—தொண்டரா, இல்லையா? பசித்தவன் சிநேகத்தில் நம்பிக்கை வைக்கலாகாது என்பர். பசியனின் பக்தியும் அந்த ரகம் தானு? 'வீட்டிலே குழந்தை குட்டிகள்

பட்டினி கிடக்குமே' என்ற பட்டினி - உணர்வில் பக்தியும் பறந்து போயிற்றே—இப்படிப் பக்தி இழந்தவர் பக்தரா, தொண்டரா?

நடராஜ பக்தியை நல்ல தருணத்தில் இழந்துவிட்டார் என்றாலும், குழந்தைகளிடம் உள்ள அன்புதானே பக்தியையும் இழக்கச்செய்தது? குழந்தையிடமுள்ள மெய்யன்பும் ஒருவகையில் பக்திதானே? இறைவனுடைய சோதனையில் தவறிவிட்டார் இவர் என்று சொல்கிறவர் சொல்லட்டும். 'நீ பக்தனல்ல, பிரஷ்டன்!' என்று சிவபெருமான் சீறி அருளியதாகக் கதையை முடிக்கிறவர் முடித்துக்கொள்ளட்டும். 'பக்தா! நமது பக்தன் நீதான். உன் குழந்தை வடிவில் நம்மையல்லவா ஆராதிக்கிறாய்? சோதனையில் வெற்றி உனக்கு!' என்று ஆனந்தக்கூத்தன் அருள் புரிந்ததாகவே எனக்குத் தோன்றுகிறது.

இதே பட்டர் ஆனந்த நடராஜரை நோக்கி, 'பரிபூர்ணராகிய தேவரீருக்கு அடியேன் கொடுக்கும் உணவு தேவையில்லை. அதோ வாசலில் காத்திருக்கிறானே பட்டினியோடு அந்த ஏழைச் சிறுவன்; அவனுக்குக் கொடுத்து மிச்சம் இருந்தால் என் வீட்டுக் குழந்தைக்கும் கொண்டு போவேன்!' என்று விண்ணப்பம் செய்துகொண்டிருந்தால், இவரை நல்ல தொண்டர் என்றும், உண்மையான தொண்டர் என்றும் நான் போற்றுவேன்.

உண்மையில், இறைவன்தொண்டு வேறு உலகத்தொண்டு வேறு என்று பிரித்துப் பேசமுடியாது.

தாயிலும் அன்பன், பூமகள்
நண்பன், தடநாகப்
பாயல் முகுந்தன் கோயில்அ -
ரங்கம் பணிவீரே

என்று சொல்லும்போதே, தாயிலும் அன்பனுக்கு உண்மையான வழிபாடு தாயைப்போல் மன்னுயிர்க்கு அன்புசெய்வது என்பதுதானே குறிப்பு!

நடராஜா ஆடும் கடவுள் என்றால் ஸ்ரீ ரங்கநாதன் உறங்கும் கடவுள். அவர் ஆடிக்கொண்டே உலகத்தை ஆட்டிவைக்கிறாராம். இவர் உறங்குவதுபோல் யோகம் செய்கிறார்; அதாவது அறிதுயில் அமர்ந்து உலகத்தை ஆட்டிவைக்கிறாராம். ஒரே மகாலட்சியத்தின்—ஒரே சத்தியத்தின்—இரு பெரும்பகுதி அரங்கனும் அருட்கூத்தனும். எனவே, சிவநேசர்களின் கருத்துக்களும் திருமால் அடியார்களின் கருத்துக்களும் ஸாராம்சத்தில் ஒத்திருக்கின்றன. தொண்டு விஷயமான கருத்திலும் இருதிறத்தாரும் கருத்தொருமித்துப் பேசியிருக்கின்றனர்.

தொண்டர்களுக்கெல்லாம் உத்தம லட்சியமாகிய பிரகலாதன் தாயைப்போல் மன்னுயிர்க்கு அன்பு பாராட்டி வந்தானென்றும், பகவானிடம் வரப்பிரசாதமாக முத்தியையும் வேண்டாமல் எந்தப் பிறவியிலும் மேலே சொன்னபடி அன்பு செய்யவே வேண்டிக்கொண்டானென்றும் கவிச்சக்கரவர்த்தி கூறியுள்ளார். 'ஏன் இப்படி?' என்றால், பாகவதம் பிரகலாதனை,

எண்ணி லாஉயிர் உடம்பு யாவையும்,
தண்ணந் தாமரைத் தலைவி மேவிய
கண்ண னாகவே காணும் காட்சியான்

என்று உலகத்திற்கு அறிமுகப்படுத்துகிறது. உலகம் வேறு, கண்ணன் வேறு என்பதில்லையாம் பிரகலாதனுக்கு. எனவே உலகப் பணியே தெய்வப் பணியென்பது பிரகலாதன் கொள்கை.

காந்தியடிகளும் தரித்திர நாராயணனுக்குத் தொண்டு செய்வதையும், ஹரிஜனங்களுக்குத் தொண்டு செய்வதையும்வற்புறுத்திவிருக்கிறாரல்லவா? மண்ணையும் வெண்ணெயும் உண்ட திருவயிறு இன்று நம்மிடம் வேண்டுவது, ததியோதனமும் புளியோதனமும் அல்ல! 'உலகத்தொண்டு' என்ற ஊட்டத்திற்கே உலகமுண்ட பெருவயிறு இன்று பசித்துக் கிடக்கிறது! ஏழைகளின் தொண்டு, 'நீசர்' என்று ஒதுக்கப்பெற்றுள்ள மக்களின் தொண்டு, இதுவே உலகத்தொண்டிலும் உத்தமத் தொண்டு. இத்தொண்டில் ஈடுபடுவோர் இன்றைய உண்மைத் தொண்டர்.

தொண்டுக்குத் தமிழ்நாட்டிலே இலக்கியமாக நிற்கும் பெரியோர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும். 'உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று அன்னதானம் செய்கிறவர்களைப் போற்றுகிறோமல்லவா? திருவரங்கனையும் தில்லைக்கூத்தனையும் அன்பிலே கண்டுகொண்டு பக்திக் கவிதைக்குப் பேரிலக்கியமாகப் பாடல்கள் பாடியிருக்கும் உண்மைத் தொண்டர்கள் உயிருக்கும் உண்டி கொடுத்தவர்கள்.

உயிரை ஊட்டிவளர்க்கும் இப்பெரியார்களின் இன்னமுதப் பாடல்களிலே 'தொண்டன் யார்?' என்பதை எவ்வளவு நுட்பமாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்கிறோம்! தெளியாத ஐயங்களையெல்லாம் தெளிவிக்கும் இப்பாடல்களிலிருந்து, 'நீசன் யார்?' என்பதையும் எவ்வளவு தெளிவாகத் தெளிந்துகொள்கிறோம்:

நுமர்களைப் பழிப்ப ராகில் நோடிப்பதோர் அளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலயர் போலும், அரங்கமா நகரு ளானே!

[நுமர்கள் - உம்முடைய அடியார்கள்.]

தொழுது தொண்டு செய்வதைவிட்டு 'ஜாதிபுத்தி'யுடன் அடியார்களைப் பழிப்பவரே 'நீசர்' என்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார்,—தொண்டர்களுக்கு ஓர் இலக்கியமாகப் பரிணமித்த பெரியார். ஜாதியை மறந்து தொண்டுசெய்வோரே தொண்டர். 'நீசனேன்! நிறைவு ஒன்றும் இலேன்!' என்று தம் குறையை உணர்ந்து திருந்திப் பிறரையும் திருத்துவோர் தொண்டர். 'நீசர்' என்று பிறரைப் பழிப்பவர் நீசர்! இது, 'தொண்டரடிப்பொடி' என்று எவ்வளவோ வினயமாய்த் தம்மைத் தாழ்த்திக்கொண்ட பெரியாரின் தேர்ந்த அபிப்பிராயம்.

பக்தனின் ஜாதி துலக்குவதே பாகவத அபசாரம். இந்த அபசாரம் பகவானுக்கு அபசாரப் படுவதைக் காட்டிலும் கொடியது. பாகவத அபசாரத்திற்குத் தண்டனை மறுமையில் அன்று; இந்த இப் பிறவியிலேயே கிடைத்துவிடுகிறதாம். இம்மையில் வெகு காலத்திற்குப் பின்பும் அன்று. நொடிப்பதோர் அளவில் என்கிறார் ஆழ்வார். 'நீசர்' என்று பிறரைச் சொன்ன அந்த நொடிப்பொழுதிலேயே தண்டனை கிடைத்துவிடுகிறதாம். தண்டனை கிடைக்கும் இடமும் வெகு தூரத்தில் இல்லையாம். 'ஆங்கே'—'நீசர்' என்று பிறரைச் சொன்ன அந்த இடத்திலேயே நீசராகிறார்களாம். இப்படிச் சொன்னவர்கள், சாதிஅந்தணர்களேனும் நீசராகிவிடுகிறார்களாம்.

எவ்வளவு 'கடுமை'யான எச்சரிக்கை! ஹரிஜனத்தொண்டு செய்வோருக்குத்தான் எத்தகைய ராஜசாஸனம், தொண்டக்குலம் என்ற ராஜகுலத்தின் திலகமான தொண்டரடிப்பொடியாழ்வாரிடமிருந்து!

பிறரை நீசரென்போர் தாமே நீசராகிறார், பிறர்க்கு வஞ்சகர் தமக்கே வஞ்சகராவது போல.

ஜாதி, வித்தை, செல்வம் என்ற முக்குறும்பும் துறந்து தொண்டாற்றுவோரே தொண்டர். ஆனால், நிறக் குறும்பும் சேர்ந்த நாலு குறும்பும் துறந்து தொண்டாற்றுவது இன்றைய நியமம்.



ஆத்ம சோதனை

★

கவியோகி
சுத்தானந்த பாரதி

★

9 பிறந்தேன்!

கடைசிக் கரு; தாயார் உடல் நலிந்தது, மெலிந்தது. மனம் மட்டும் வேங்கடேசப் பெருமானையே நினைந்தது. அந்தக் காலம் எங்கள் வீட்டில் சிலர் திருப்பதி சென்று வந்து அல்லும்பகலும் எழுமலையானை பக்தி செய்தவண்ணமிருந்தனர். அமோகமான பஜனை ஆராதனைகள் நடந்தன. "இனிப் பிள்ளை வேண்டாம் என்று மனம் சலித்த பிறகு, இந்தப் பிரசவம் ஏன் வந்தது?" என்று தாயார் நொந்தாள். 'இவள் பிள்ளையாண்டு பிழைக்கமாட்டாள்' என்று வேணிப்பாட்டி பயந்தாள். "இந்த நோஞ்சல் வயிற்றில் பிறக்கும் பிள்ளை எத்தனைநாள் இருக்கப்போகிறது?" என்று பலர் கையை உதறிவிட்டனர். அம்மாளுக்கும் நோய் தாங்கமுடியவில்லை. கருவைக் கரைத்துவிடலாம் என்று நினைத்து, மருந்தைத் தயாராக வைத்துக்கொண்டு படுத்தாள். தெய்வச்செயல்! பிறகு நடந்ததை அம்மாள் எங்களிடம் சொன்னாள்.

"தூக்கமே வராத எனக்கு அன்று என்னையறியாமல் உறக்கம் வந்தது. கருவைக் கரைக்கும் மருந்து சாப்பிடவேண்டிய வேளை தவறிவிட்டது. மணி நான்கு; திருப்பதிப் பெருமாள் என் கனவில் வந்தார். ஒரு தங்கணியும் மலரும் தந்தார். 'பயப்படாதே மணிக் குழந்தை பிறக்கிறது, என் குழந்தை அது' என்று மறைந்தார். சட்டென்று எழுந்தேன். அதேசமயம் அவருக்கும் அப்படியே கனவுண்டானது"......

பரமபக்தர்கள் உள்ளம் கடவுளன்பில் ஆழ்ந்திருக்கும்போது இறைவன் உறுதியாக அபயமளிக்கிறான். இதை எனது வாழ்விலேயே பலமுறை பார்த்திருக்கிறேன். மலர் ஞானமலர்ச்சி, மணி அருள்வாக்கைக் குறிக்கும் என்பது எனது துறவிப்பாட்டன் விளக்கம். எனது வாழ்விற்கும் இந்தக் கனவிற்கும் சம்பந்தம் இருக்கிறது என்பதை அனுபவத்தில் நான் அறிந்தேன்.

மறுநாள் அம்மாளுக்குத் தைரியம் உண்டானது. மனம் மாறுதல் அடைந்தது. உடல்நோய்கூடத் தணிந்தது. 'பெருமாள் காப்பார், நமக்கு இனிக் கவலையில்லை. பாரம் அவனது' என்று எந்தை மந்திரஜபத்திலும் ஆராதனையிலும் ஆழ்ந்தார். பாட்டி பக்தி கீதங்கள் பாடிக்கொண்டிருந்தாள். தாயார் தாயுமானுர் பாடலைப் பாடி மனதை உன்னத நிலையில் வைத்திருந்தாள். ஓர் அனாதைப் பெண்ணுக்கு சுகப்பிரசவமாகத் துணைசெய்த தாயுமானுரே தனக்கும் துணைசெய்வார் என்று நம்பினுள். ஏழுமலையானை எப்போதும் நினைத்தாள். வீடெல்லாம் பக்தியும் பனுவலுமாயிருந்தது. அந்தத் தெருவிலே ராமபஜனையும், சிவபஜனையும் அமளியாக நடந்தன.

ஏவிளம்பி, சித்திரை, புதன், உதயாதி பதினெரு நாழிகை, சுக்லபக்ஷ தசமி, 3—1, ஏகாதசி 55—27. வீட்டில் தந்தை முதலானேர் ஹரிபக்திப்பரவசராயிருக்கிருர்கள். "வேங்கட ரமணு சங்கட ஹரணு" என்று சிந்திக்கின்றனர். தாயார் பிரசவ வேதனையுடன் "ஹே பரமாத்மா!" என்று அலறுகிருள். வழக்கமாக ஏகாதசியன்று நடக்கும் விரத வைராக்கியம் அன்று பிரசவ வைராக்யத்துடன் சேர்ந்து பலமாக நடக்கிறது. பாட்டி "இந்தப் பிள்ளை பிறந்து தாய் வேறு குழந்தை வேருனல் உன் சந்நிதிக்கு வந்து மொட்டை போடுகிறேன்!" என்று வேண்டிக்கொண்டு பணம் முடிக்கிருள்.

அதேசமயம் உள்ளே கீச் கீச் கீச் என்று குரல் கேட்டது. ஒரு புதிய ஜீவன் "இதோ உலகிற்கு வந்துவிட்டேன், என் வினையைச் செய்ய வந்துவிட்டேன், விட்டகுறையை முடிக்க வந்துவிட்டேன்." என்பதுபோல் மூன்று கீச்சுக்குரல் கேட்டது. பிறகு குழந்தை கீச்சிடவில்லை, அழவுமில்லை; புன்னகைத்தது. தாயார் மயக்கம்போட்டு விழுந்தாள். வேணிப்பாட்டி குழந்தையை அப்புறம் எடுத்தெறிந்து, தாயைக் கவனித்தாள். குழந்தையும் பிறர் தயவை எதிர்பாராமல் இருந்தபடி இருந்தது. வெளியே பஞ்சாக்ஷரி ஜபித்துக்கொண்டிருந்த மீனுக்ஷிப்பாட்டி ஓடிவந்து, குழந்தையைச் சுத்தம் செய்தாள். ஆனுல், யாரும் செவ்வெண்ணெய் புகட்டவில்லை. தாய்ப்பாலும் இல்லை, தொண்டைக்குழியும் தோண்டவில்லை.

தகப்பனுர் 'இதோ' என்று புட்டிப்பாலை நீட்டினுர். அதைத்தான் எனக்குக் கொடுத்தார்கள். தாய்ப்பால் இல்லாவிட்டால் ஆட்டுப்பாலும் பசும்பாலும் சேர்த்துத் தரலாம். இல்லாவிட்டால் கேப்பைக் கூழைத் தரலாம். பளபளப்பான புட்டியிலும் டப்பியிலும் மயங்கும் அந்தக் காலத்தில் என் பெற்றோருக்கு உள்ளூர் பசுவின் பாலை ஊட்டக்கூடத் தோன்றவில்லை. ஸ்விஸர்லாந்து எருமைக் கடாப்பாலைக் காய்ச்சி சத்தையெல்லாம் எடுத்து சக்கையில் சக்கரை

சேர்த்து, டப்பாவில் அடைத்து நாட்கணக்காக காற்று வெயில் படாமல் மூடிவைத்த புட்டிப்பாலை எனக்கு ஊட்டினர். பலன் என்ன? என் உடம்பு குச்சிபோல் மெலிந்ததுதான். பிற்காலம் யோகபலத்தினால் எனது காரியத்திற்கேற்ற சக்திக்கனலை வளர்த்து நோயில்லா வாழ்வெய்தினேன்.

பெற்றோருக்கு எச்சரிக்கை! தாய்ப்பால் நல்லது; அல்லது ஆட்டுப் பால் பசும்பால் ஊட்டுங்கள். டப்பாப்பாலை ஒருநாளும் குழந்தைகளுக்குப் புகட்டவேண்டாம். பால்வாங்கமுடியாவிட்டால் புழுங்கல் நொய்யும் கேப்பையமாவும் போட்டு நீர்க்கக் கஞ்சியாக்கிப் புகட்டலாம்.

10. ஜாதக பலன்

தகப்பனாருக்குச் சோதிடம் வரும். அவர் கடைக்குட்டியின் லக்னத்தைக் கணித்து ராசி அம்ச சக்கரங்களைப் போட்டார். மாமா, பக்கத்துவீட்டு சாஸ்திரிகள் எல்லோரும் ஜாதகத்தை அலசிப் பார்த்துப் பலன் எழுதினார்கள். அவர்கள் எழுதிய ஜாதகம் இதுதான்.

	சூரியன் சுக்ரன் புதன்		
	ராசி		ல/செ கே/மா
ராகு			வியா
	சனி		சந்

			ராகு
	அம்சம்		செ-வியா சனி
சந்திரன்			சுக்ரன்
சூரியன் புதன் கேது			ல—

“இது யோகி ஜாதகம்; இந்தப் பிள்ளை துறவியாகப்போவான்” என்று ஒரு ஞானி சொன்னார் “அப்படியில்லை; இவன் நன்றாகப் படித்து நன்றாகச் சம்பாதிப்பான்; ஜாம் ஜாம் என்று மந்திரி உத்யோகம் செய்வான்...நல்ல இடத்தில் கலியாணமாகும், வியாழ தசையில்” என்று தகப்பனாரும் இன்னும் சிலரும் கூறினர். “இந்த ஜாதகனுக்குக் குடும்பம் உண்டா இல்லையா?” என்று கட்சியாடினர் பலர். பிற்காலமும் என் ஜாதகத்தைப் பலர் பார்த்துப் பலன் சொல்லியிருக்கிறார்கள். கவி, புலவன், யோகி, சித்தன் என்று பலன் சொன்னவர்கள் பலர். அவர்களை என் அப்பா அதிகம் மதிப்பதில்லை. “இந்த ஜாதகக்காரன் படித்து மந்திரி உத்யோகம் பார்ப்பான்; குதிரைசவாரி பண்ணுவான்; எல்லோரும் புகழ்வார்கள், வியாழதசையில் பெரிய இடத்தில் கலியாணமாகும்; மணிபோல நான்கு ஆண்பிள்ளைகளும், கிளிபோல இரண்டு பெண் பிள்ளைகளும் பிறப்பார்கள்” என்று சொன்னால், உடனே சர்க்கரை வழங்கி, “உங்கள் வாக்கு பலிக்கவேண்டும்” என்பார். எனது யோகத்தையும் தியானத்தையும் ஞானப்பாடல்களையும் காணும்

போதெல்லாம் "மாமா! இதெல்லாம் ஒரு பைத்தியம்; ஒருத்தியைக் கட்டிப்போட்டால், அவள் காலில் விழுந்து சேவை செய்வான்" என்பார். என் உறவினள் ஒரு பத்ரகாளி, "வேதாந்தமா! இரு, என் மகளை உனக்குக்கட்டி உன்னை வழிக்குக் கொண்டுவருகிறேன்" என்பாள். "அம்மா பரதேவதே! என்னை நரகத்திலே வேண்டுமாயினும் தள்ளு; இந்த ஆபத்தில் மாட்டிவிடாதே" என்று நான் சுத்தசக்தியைத் தொழுவேன். சோதிடக் கலையை நானும் சிறிது கற்றேன். ஆனால், எனது ஜாதகப் பலன்களையே நான் மீறவும் கற்றேன். எனக்குப் பத்தாம் மடத்தில் சூரியன், சுக்ரன், புதன் ஆகிய மூன்று கிரகங்களும் உச்சம். இரண்டில் குரு இருக்கிறான். ஆதலால் கலையும் புகழும் உண்டு. என்றாலும், வெறும் கலைஞானமும் அபரவித்தையும் உலகப்புகழும் எனக்கு விருப்பமில்லை. கடவுளைக் காட்டாத கலை காலக் கோலைதான். லௌகிகக் கலைகளில் என் உள்ளம் செல்வதில்லை. நான் எதைச் செய்தாலும் எதை நினைத்தாலும், எதைப் பேசினாலும் எதைக் கொடுத்தாலும் எதைக்கற்றாலும் எதை எழுதினாலும் தெய்வத்தின் ஆதேசத்தால், தெய்வமகிமை விளங்கி, உலகில் சன்மார்க்க ஒளி பரவவே எல்லாம் செய்யவேண்டும் என்பது எனது கொள்கை. இந்தக் கொள்கைக்கு இடமில்லாத எந்த இயக்கத்திலும் என் மனம் புகாது. தெய்வத்தைத் தீவிரமாக நம்பினவன் ஜாதகபலனைப்பற்றி யோசிக்க வேண்டியதில்லை. ஏனெனில், நட்சத்திரங்களைவிட அண்டபிண்ட சராசரங்களையும் படைத்த கடவுளின் அருளே பெரியது. ஆகாசத்தையே உடலாகக்கொண்ட இறைவனைச் சரண்புகுந்தபிறகு, அதில் சுழலும் மின்மினிப் பூக்களின் ஓட்டம் எப்படியானால் நமக்கென்ன? தெய்வபலம் விதியைவிடப் பெரிது. ஆதலால், நான் எதைச் செய்தாலும் நாள் கிழமை நட்சத்திரம் பார்ப்பதில்லை. சகுனங்கூடப் பார்ப்பதில்லை. யோக தியானம்செய்து தெய்வத்தை உபாசனைசெய்து, எந்தக் காரியத்தையும் தொடங்குவேன். என் மனச்சாட்சி ஒப்பினால், அதுதான் எனக்கு நல்ல சகுனம், ராசி எல்லாம். என் மனச்சாட்சி ஒப்பாவிட்டால் எதையும் நான் மேற்கொள்ளமாட்டேன். மனச்சாட்சிதான் என் மந்திரி, கணி, பிரதானி எல்லாம். கை ரேகையும் நான் பார்ப்பேன். என்றாலும், ரேகையும் ராசியும் ஜடப்பொருள்களை ஆதாரமாகக்கொண்டவை. என் ஆத்மா சுத்த சைதன்யப்பொருள். ஆதலால், அதன் கட்டளைப்படியே நடக்க வழக்கப்படுத்திக்கொண்டதால் ஜாதகம் பார்ப்பதில்லை.

ஒரே ஒரு பரமயோகிதான் எனது வாழ்வின் பலனை உள்ளே ஆழ்ந்துபார்த்துச் சொன்னார். "பதினெட்டு வயது வரையில் கடுமையான சோதனைகள் வரும், வாழ்க்கை உலகவெறுப்பை யூட்டும். அது தவத்தைத் தீவிரமாக்கும். இருபத்திரண்டு மட்டும் உயர்ந்த கலைவளர்ச்சியும் கவித்திறமையும் பெருகும். இருபத்திரண்டாம் வயதில் ஆத்ம சாட்சாத்காரமும் யோகசித்தியும் உண்டாகும். பிறகு பல மகான்களின் நட்புறவும் புகழும் உண்டாகும். இருபத்தாறாம் வயதில் தீவிரமான நிஷ்டையும் சகஸ்ரார சித்தியும் உண்டாகும். பிறகு நீ மௌனமாகவே இருபதாண்டுகள் இருந்து

அரிய ஞானக் கலையை உலகிற்குத் தருவாய். அதன்பிறகு நீ விரும்பினுல் உலகப்புகழ் பெறுவாய். இன்றேல் நீ இமயமலைக்குச் சென்று அங்கே யோகசங்கம் நாட்டி, ஆத்மசித்தியால் மௌனமாகப் பல தொண்டுகள் செய்வாய். உன் உடல் மறைவை யாரும் அறிய மாட்டார்கள்..." என்ருர். நூற்றுக்கு ஐம்பது அவர் சொல் பலித்துவருகிறது.

ஆயினும், தசப்பொருத்தம் என்று செய்த திருமணங்கள் வெருகுச் சண்டையில் முடிவதைக் கண்டிருக்கிறேன். ஆயுள் நூறு என்று கொடுத்த பெண் வாபஸ் வரக் கண்டிருக்கிறேன். குணம் தங்கக் கம்பி என்ற இடத்தில் பேய்பிடித்துப் பிதற்றுவதைக் கண்டிருக்கிறேன். ஆதலால் ஜாதகப் பொருத்தம்மட்டும் போதாது. பலமான மனப்பொருத்தம் இருக்கவேண்டும். மனோதைரியம் வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் வெற்றிபெறமுடியும். உதாரணமாக எனது லக்னம் கடகம்; நட்சத்திரம் உத்திரம். உத்திரத்தில் பிள்ளையும், ஊர் ஓரத்தில் செய்யும் என்பர். நான் ஊர் ஓரத்தில் கூடயில்லாமல் இப்படி நாடெல்லாம் ஞானப்பித்தனுகத் திரிந்தேன்! ஸ்ரீ ராமனுக்கும் கடகலக்னம் எனக்கும் கடகம் என்ருல் நான் ராவணசம்ஹாரம் செய்யமுடியுமா? மனதில்பத்துத்தலைகளுடன் அட்டூழியம் செய்யும் காமக்குரோதாதிகளைத்தான் வைராக்கியக் கோதண்டத்தால் வதைக்க முடியும்.

என் அருமைச் சகோதர சகோதரிகளே! ஜாதகத்தைப் பார்த்து மயங்காதீர்கள். ஜாதகம் சாதகமாயிராவிட்டால் கலங்காதீர்கள். மனோதைரியத்தால் தெய்வபக்திகொண்டு நல்ல காரியங்களைத் துணிந்து செய்யுங்கள்.

முயல் முயல்க முயல்மேன் மேலும்
பயன்களைவைத் தீசன் பதம்.

11. என் பெயர் எது?

ஜாதகர்மத்திற்குப் பிறகு நாமகர்மம் வருகிறது. என் பெயர்கள் பல; எல்லாம் காரணப் பெயர்கள். இயற்கையில் எதற்கும் பெயர் இல்லை. வண்ணுன் வேட்டிக்குக் குறிபோடுவதுபோல் நாமும் ஒரு பெயர் வைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. வேங்கடப் பெருமாள் கனவில் வந்தார்! மணி தந்தார் அல்லவா? அதனுல் எந்தை எனக்கு வேங்கட(சுப்பிர)மணி என்று பெயரிட்டார். வேங்கட சுப்பிரமணியன் பள்ளிக்கூட ஆஜர் புத்தகத்துடன் சரி... இந்தப்பெயரே மறைந்துபோனது. நான் பிறந்த வைராக்கிய வேளை என் பெற்றோருக்கும் வைராக்கியம் பெருக்கியது. இனிக் குழந்தைகளே வேண்டாம் என்று இருவரும் பிரமசரியம் பூண்டு ஜப விரத நியமங்களில் ஆயுளைக் கழித்தனர். நான் செல்லப்பிள்ளையாக வளர்ந்தேன் என்பர்... உண்மை அது இல்லை. ஆனுல், எனக்குச் செல்லையா என்று குடும்பத்தில் பெயர் வழங்கியது. எனக்கு ஏழுவயதில் திருப்பதி மொட்டை போட்டார்கள்; மொட்டையடிப்பதில் எனக்கும் அளவற்ற இன்பம். தலைவழித்துக்கொண்டு வா என்று பணம் தந்தால் வழுக்கை மொட்டையடித்துக் கொண்டு வந்து வசவு வாங்குவேன். என் மொட்டைக் காதலால் எனக்கு போடி, மொட்டை, திருப்பதிமொட்டைஎன்று பெயர் வழங்

கியது. சதா திருப்பதிக் காதல் என்னைப் பற்றிக்கொண்டது. ஆதலால் என்னைச் சிலர் கோண்ட, (ஏழுமலை) என்று அழைத்தனர். இந்தப் பெயர்களையெல்லாம் மறதிக்குழியில் தள்ளி, எனக்கேற்ற பெயரைத் தந்தவர் ஒரு யோகசித்தர்...அதுவே சுத்தானந்தன் என்ற பெயர். அந்த மகானின் அருள் உள்ளத்தில் உதித்த அந்தப் பெயரே எனது ஆதர்சம். சுத்தமே கடவுள், சுத்தப்பிரமம். பரம சுத்தவஸ்துவான கடவுளே இன்பம், ஆனந்தம்; தூய பரம்பொருளின் அன்பிலும் அறிவிலும் ஐக்கியத்திலும் இன்புறுவோன் சுத்தானந்தன். அத்தகைய தூய இன்ப நிலைபெற்று இன்பத் தூயனாகவே நான் எனது வாழ்வை அர்ப்பணித்தேன். பாரதி என்பது எனது துறவுப்பெயர்; நான் பரமஹம்ஸ ஸந்யாசியானேன். தீட்சாகுரு எனக்கு சுத்தானந்த பாரதி என்று பெயரளித்தார். பாரதி என்பது எனது கவிதைப் பெயரன்று. மேலும் எங்கள் வீட்டுப்பெயர் பாரதிவாரு; நான் உபாசிக்கும் வாக்தேவியும் பாரதி. ஆதலால், சுத்தானந்தத்துடன் பாரதியும் சேர்ந்தது. இந்தப் பெயரைக் கேட்கும்போது நான் என்னை நினைப்பதில்லை; என்னுள் அதுவான தூய பரம்பொருளையும் அதன் அருளான பாரத சக்தியையும் நினைப்பது வழக்கம். அதனாலேதான் நான் கடவுளை சுத்த சக்தியாக உபாசித்தேன்.

மற்றொரு மகான் எனது வெளிப்படையான இயல்பைக்கண்டு "உள்ளும்புறமும் நீ உண்மை, உன்பெயர் சத்யார்கா" என்றார். உண்மைக் கதிர் என்பது அதன் பொருள். நான் வடநாட்டில் சுற்றிய போதும் சில வடநாட்டுப் பத்திரிகைகளுக்கு எழுதியபோதும் சத்யார்க்கா வானேன். இந்தப் பெயரை நினைத்தபோதெல்லாம் என் வாழ்வில் அபத்தங்கள் புகுந்தனவோ என்று ஆராய்ந்து களைந்து என் மனச்சாட்சிக்கு உண்மையாக நடக்கவே முயல்வேன். சத்தியக்கதிர் என்பது எனக்கு மனச் சாட்சிதான். ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்திற்கு வந்தபிறகு நான் தெய்வக்காதலில் முதிர்ந்தேன். கடவுளை எனது காதலனாகவே கண்டேன். என்னை ராதா என்று கருதி கடவுளைக் கண்ணன் என்று அன்பு செய்தேன். அதனால் ஸ்ரீ அரவிந்தர் அருளால் ராதானந்தா ஆனேன். ராதானந்த பாபுவும் ஆனேன். இவற்றைத்தவிர நான் அத்வைத சாதனம் செய்தபோது ஆத்மானந்தன் என்று பெயர்பெற்றேன். சிவானந்தன், சக்திச் சுடர் என்ற பெயர்களும் உண்டு. பள்ளிப் பருவத்தில் நான் யோகம் பயின்றதால் என்னை யோகி, ஞானப்பைத்தியம் என்று தோழர் கேலிசெய்வதுண்டு. அன்னை என்னை யோகி என்றே அழைக்க வேண்டும் என்றாள். எல்லாம் வடிகட்டிப் பார்த்தபிறகு சுத்தானந்தன் என்பதே எனக்குப் பிடித்தது. யோகி, பாரதி என்பன என் ஆதர்சங்களை எப்போதும் நினைப்பூட்டவேயொழிய, பட்டம் வைத்துப் படாடோபம் செய்ய அன்று. ஒருகாலத்தில் நான் இந்தப் பெயரைக்கூட வழங்காமல் கடிதங்களின் அடியில் தங்கள் அன்புள்ள O சுன்னம் என்று போட்டுக்கொண்டிருந்தேன். ஏனெனில், எல்லாம் முடிவில் அந்த வட்டத்தில், சோமவட்டத்தில் அடங்கி விடுகின்றன அல்லவா?

போதும் பிறந்த கதை, இனி வளர்ந்த கதையைக் கேளுங்கள்!

கைமேல் பலன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சாதாரணமாக கருணா ஸௌமுகியின் இந்தமாதிரி பேச்சுக்களுக்கு ஒன்றுமே பதில் சொல்லமாட்டாள். அப்படியாவது ஏதாவது சொன்னாலும் வேண்டா வெறுப்புடனே ஒன்றிரண்டு வார்த்தைகள் கூறிவிட்டு மௌனமாயிருந்துவிடுவாள்.

இன்று ஸௌமுகியின் பேச்சைக் கேட்டதும் அவள் முகம் கிரகண கால சந்திரனைப்போல இருண்டுவிட்டது. கை நிறைய வளையல்களுடனும், தளர்ந்த உடலுடனும், முகத்திலே ஒரு புதிய பொலிவுடனும் படுத்துக் கொண்டிருந்த ஸௌமுகியின்மேல் அவள் பார்வை விழுந்தது. சில நாட்களுக்கு முன்தான் ஸௌமுகிக்கு சீமந்தம் நடந்தது; இது அவளுக்கு எட்டாவது மாதம். நடக்கவும் பேசவும் உட்காரவும் எல்லாவற்றிற்குமே அவள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தாள்.

அவள் நிலையைக் கவனித்த கருணாவுக்கு இன்னும் சில மாதங்களிலே, தானும் அப்படியெல்லாம் அவதிப்படத்தான்போகிறோம் என்பது நினைவுக்கு வந்தது. இப்போதே அவள் தலை சுற்றலும், வாந்தியும், பலவீனமுமாக அவதிப்பட்டபடிதான் இருந்தாள்.

இந்த அவதியைப் பொறுத்தவரையில் ஸௌமுகிக்கும், அவளுக்கும் ஒற்றுமையிருந்ததே தவிர, ஸௌமுகியின் ஆனந்தத்தில் ஆயிரத்திலொரு பங்கு கூட கருணாவிடம் இல்லை. “ஊம்—எந்த பாபஜென்மத்தை இந்த உலகத்திற்குக் கொண்டுவரப்போகிறேனோ நான்?’ என்ற வயதுக்கு மீறிய விரக்தியோடு இருந்தாள் கருணா.

வாஸ்தவம்தான். எக்ஸிக்யூடிவ் என்ஜினீயரின் ஏக புத்திரியான ஸௌமுகி தாயாகப் போகிறாள்—அதுவும் நாலைந்து குறைப் பிரசவங்களுக்குப் பிறகு—என்றால், அவள் பிறந்த விட்டில் தடபுடல் படுவதில் என்ன ஆச்சர்யம் இருக்கிறது? புகுந்த விட்டில் மட்டுமென்ன? “ஸௌமு, ஸௌமு” என்று அவள் பக்கத்தை விட்டு அசைவதே கிடையாது சுகுமார். “என்னம்மா வேண்டும் உனக்கு? இந்த மருந்தைச் சாப்பிடுகிறாயா? அந்த ஷர்பத்தைக் குடிக்கிறாயா?” என்று அடிக்கொருதரம் அவளைக் கூப்பிட்டு கேட்டபடியே இருப்பார் சர்மாவும். “சின்ன அம்மாவுக்கு நல்ல ராசாப் பையனா பொறக்கணும்” என்று விடுகூட்டும் வள்ளிகூட ஆசீர்வதிப்பாள்.

ஆனால், கருணாவின் விஷயம் எப்படி? ஐம்பது வயதுக்காரரின் நான்காம் தாரமான அவளுக்குக் குழந்தை பிறப்பது என்ன அவ்வளவு உயர்த்தியான சம்பவமா? அவளைப்பற்றி ஒருவருமே ஒன்றுமே கவனிக்கவில்லை. வளைகாப்பு என்றும், சீமந்தம் என்றும் ஒன்றும் பண்ணப்போவதாக யோசிக்கவும் இல்லை. சர்மாவும் ஒன்றும் அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை. பிறக்கப்போகிற குழந்தைக்கு என்ன பேர் வைப்பது என்கிற பிரமாத பிரச்னையைத் தீர்த்துவைக்க சண்டைபோடவும் இல்லை!

அதனால், ஸௌமுகியின் கேள்விக்குப் பதில் கருணா ஒரு அலட்சியப் புன்னகைதான் புரிந்தாள். “பிரமாத யோசனை போ. என்னவோ கல், மண், மண்ணாங்கட்டி என்று பேர் வைக்காமல் ஏதோ மனுஷா பேரை வைத்துக் கூப்பிடப்போகிறோம். இதுக்காகவா இவ்வளவு சண்டையும் சாடியும்” என்று அவள் சற்று ஏகத்தாளமாகச் சொன்னது ரோஷக்காரியான ஸௌமுகியின் முகத்தைச் சுண்டவைத்துவிட்டது. அவள் உற்சாகத்திற்கும் முத்தாய்ப்பு வைக்கப்பட்டது. ஆகவே, அவள் ‘விர்’ என்று எழுந்து அப்பால் போய்விட்டாள்.

6

வாழ்க்கையென்னும் பாலத்தினடியில் காலமென்னும் தண்ணீர் பல முறைகள் ஓடிவிட்டுச் சென்றதின் பயனாய், சர்மாவின் குடும்பத்தில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. சின்னஞ்சிறு குழந்தைகளாய் தொட்டிலிலும், தூளியிலும் தூங்கிக்கொண்டிருந்த ஸாமுகியின் பெண் லேகாவும், கருணாவின் பெண் பாலாவும் சிறு 'டிபன் பாக்ஸுகள்' சகிதம் பள்ளிக்கூடம் போகத் தலைப்பட்டுவிட்டனர்.

இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பமான புதிதாகையினால், முதலில் சுகுமார், ஸாமுகியின் அன்புப் பிணைப்பிலிருந்து பலவந்தமாகப் பிரிக்கப்பட்டு போர்முனைக்கு அனுப்பப்பட்டான். அவனைத் தொடர்ந்து சர்மாவும், போர்க்களத்தில் டாக்டராக சேவைசெய்ய அனுப்பப்பட்டார்.

இந்த திடீர் மாறுதல் ஸாமுகியையும் பாதிக்காமல் இல்லை. வீட்டில் சும்மா உட்கார்ந்து மனம் புழுங்கிப்புழுங்கித் தவிக்க இஷ்டமில்லாத அவள் அருகிலிருந்த பள்ளிக்கூடமொன்றில் ஆசிரியையாக அமர்ந்துகொண்டாள்.

அந்த வீட்டில் மாறுதல் எதுவும் ஏற்படாதது கருணாவின் உள்ளத்தைப்பொறுத்தவரையில்தான்! எப்போதும்போல, அவள் சிறிதும் உற்சாகமோ தெம்போ இல்லாமல், தன் வாழ்க்கையை இயந்திரம்போல நடத்தி வந்தாள். சலனமற்ற அவளது வாழ்க்கையிலும், ஒரு சலனம் ஏற்பட ஆரம்பித்தது! அதற்குக் காரணம் சுகுமாரின் எதிர்பாராத வருகைதான்!

7

வலதுகையில் எலும்பு உடைந்து அதன்காரணமாக, நீண்ட விடுமுறை பெற்று வந்திருந்தான் சுகுமார். ஆகவே, அவனுக்கு அருகிலேயே ஒருவர் எப்போதும் இருந்து அவனுடைய தேவைகளைக் கவனித்துக் கொள்ளவேண்டியிருந்தது. ஸாமுகி பகல் நேரமுழுவதும் பள்ளியிலேயே இருந்துவிடுவாள். ஆகவே, கருணாதான் அவன் பணிவிடைகளையெல்லாம் செய்தாள்.

அவனுடைய கண்களாகவும், கால்களாகவும் கரங்களாகவும் உழைத்துவந்த கருணா, வரவர அவனுக்கு ஸாமுகியைவிட இன்றியமையாதவளாகிவிட்டாள்! இருந்தும், அவன் மனம் அவள் செய்கைகளில் திருப்தியடையவில்லை. ஸாமுகிக்காக ஏங்கித் துடித்துக்கொண்டிருந்தது அவன் உள்ளம்.

அவன் பேச்சுப்பிரியன். பகலெல்லாம், தன் பிரதாபங்களைப்பற்றி அளக்க அவனுக்கு கருணா தேவையாயிருந்தது. ஆனால், மாலையில் ஸாமுகி வந்ததும், அவன் மனோ வாக்கு காயம் மூன்றும் அவளிடமே ஐக்கியப்பட்டுவிடும். சித்தி எதிரிலிருப்பதைக்கூட மறந்து மனைவியிடமும் குழந்தையிடமும் சுகுமார் கொஞ்ச ஆரம்பித்துவிடுவான்: அப்போதெல்லாம் கேட்பார் புடைப்பார் இல்லாத நாதியற்ற அனாதைகளைப்போல தனியாய் இருப்பார்கள் கருணாவும் பாலாவும்.

சிறுகச் சிறுக, கருணாவின் மனதில் 'பொறாமை' குடிகொள்ளத் தலைப்பட்டுவிட்டது. அதன் பலனாக, ஸாமுகியிடம் அவள் நடந்துகொள்வதும் வித்தியாசப்பட்டது! ஆனால், தன் பொறாமை தன்னை இவ்வளவு விபரீத நிலையில் கொண்டுவைக்குமென்று அப்போது அறியவில்லை! அறிந்திருந்தால்... ஊ...ம் அறிந்திருந்தால், எவ்வளவோ நன்றாயிருந்திருக்குமே!

8

காலை மணி ஒன்பதரை இருக்கும். அவசர அவசரமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் ஸாமுகி. கையில் பிரித்த கடிதத்துடன் அங்கே வந்தான் சுகுமார்.

"ஸுமுகி உனக்கு லீவு கிடைத்ததா இல்லையா? உனக்கு லீவு கிடைப்பதற்குள் எனக்கு லீவு ஆகிவிடும்போல் இருக்கே. இதோ இன்றைக்குக்கூட என் ஆபீஸர் எழுதியிருக்கார் 'கை தேவலையா?' என்று. ஆயிற்று, இன்னும் பதினைந்துநாளில் போய்விடுவேன் நான். அப்புறம் நீ லீவு எடுத்துக்கொண்டால் என்ன? எடுத்துக்கொள்ளாவிட்டால் என்ன? இந்தப் பாழும் வேலை வேண்டாம். நமக்குப் பணமா இல்லை? இதை விட்டுத் தொலை என்றாலும் கேட்கமாட்டேன் என்கிறாய். என்னைவிட உன் வேலைதான் பெரியதாய்ப்போய்விட்டது உனக்கு! இல்லையா?" என்று நிஷ்டூரமாகப் பேசுகையில் இடையில் குறுக்கிட்டாள் ஸுமுகி.

"ஏன் இப்படி கோபித்துக்கொள்கிறீர்கள்? இப்போது பரீக்ஷை சமயமானதினால்தான் லீவு கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். அப்படி தராவிட்டால் நீங்கள் சொன்னபடி வேலையையே வேண்டுமானாலும் விட்டு விடுகிறேன், இவ்வளவுதானே? இதற்கா இவ்வளவு கோபம்" என்று அவள் கொஞ்சிக்கொஞ்சி சொன்னது சுகுமாரின் கோபத்தை உடனே சாந்தப்படுத்தியிருக்கும்.

ஆனால், ஸுமுகியின் பொல்லாத வேளையோ என்னவோ, அந்த சமயம்பார்த்து அங்கே வந்தாள் கருணை. வந்தவள் சும்மாயிராமல் பேச்சிலும் குறுக்கிட்டு "ஸுமுகி! அவ்வளவு சுலபத்தில் வேலையை விட்டுவிட முடியுமா! நீ விட்டாலும் உன் மானேஜர் விட்டு விடுவாரா உன்னை?" என்று கேலியாகச் சொன்னதைக் கேட்டதும், ஸுமுகியின் முகம் சிவந்தது.

"போங்கள் சித்தி" என்று அவள் முகத்தைச் சிணுக்கியபடியே கூறி விட்டுப் போய்விட்டாள்.

விஷயம் அத்துடன் முடிவடைந்துவிட்டது என்றுதான் எண்ணினாள் கருணை. ஆனால், தன் வார்த்தைகள் சுகுமாரின் தூய உள்ளத்தில் சந்தேகம் என்கிற 'வித்தை' நட்டுவிட்டன என்பதை அவள் அப்போது அறியவில்லை!

9

அதற்கடுத்த ஏழெட்டு நாட்களுக்குப் பிறகு சுகுமார் ஒருநாள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது திடுதிடுப்பென்று, "ஏன் சித்தி அன்று சொன்னாயே ஸுமுகியின் மானேஜரைப் பற்றி, அவன் என்ன கொஞ்சம் 'ஒரு மாதிரி' தானா? எத்தனை நாளா இவளுக்கும் அவனுக்கும் சினேகம்?" என்று கேட்டபோது கருணைவுக்குத் தூக்கிவாரிப்போட்டது!

"பாவம்! ஸுமுகிமேலே இந்த அபாண்டமா?" என்று எண்ணினாள். பார்க்கப்போனால், ஸுமுகியின் பள்ளிக்கூட மானேஜருக்கு எழுபது, எழுபத்தைந்து வயதிருக்கும். ஸுமுகியவ்வளவு பேத்திகள்கூட இருந்தார்கள் அவருக்கு. இந்த ஒரு வார்த்தையைக் கருணை சொல்லியிருந்தால்கூடப் போதும். ஆனால், அந்த வார்த்தையைத்தான் சொல்லவில்லை அவள்!

இவ்வளவு நாள் ஸுமுகிமேலிருந்த ஆத்திரம் பொறாமை இவை யாவும் சேர்ந்து இவள் பெருந்தன்மை, பச்சாத்தாபம், பூததயை என்ற நற்குணங்களுக்குத் திரைபோட்டுவிட்டன, சுயநலம் அவள் கண்களைக் குருடாக்கிவிட்டது.

அதனால் அவள் சற்றும் யோசிக்காமலே வெடுக்கென்று "ஆமாம், என்னத்தைச் சொல்வது? சலனசித்தமுடையவர்கள்தானே பெண்கள்? நீண்டகால பிரிவிற்குப் பிறகும் அவர்கள் மனம் உறுதி பிறழாமல் இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் தவறுதானே? அதிலும் நாலு இடங்களுக்குச் சுதந்திரமாகப் போய் நாலுபேரோடு பழகுபவரைப் பற்றிக்

கேட்கவேண்டுமா?" என்று சற்றும் கூசாமல் அபாண்டமாகப் பழி சுமத்தினான் ஸௌமுகியின்மீது.

சுகுமார் அதை அப்படியே நம்பினான். அவன் முகம் கோபத்தால் சிவந்தது. அவமானத்தினால் சிறுத்தது. 'தட் தட்' என்று அடி வைத்துக் கொண்டு வேகமாகத் தன்னறைக்குப் போய்ச்சேர்ந்தான்.

அதற்கடுத்த மூன்று நாட்களுக்கெல்லாம் கை கட்டு அவிழ்த்து, லீவும் ஆகி, அவன் ஊருக்கும் போய்விட்டான். ஆகவே, தன் வார்த்தைகள் அவன் மனதில் எவ்விதமான புரட்சியை உண்டாக்கிவிட்டன, அதனால் ஒரு பாவமும் அறியாத பேதை ஸௌமுகியின் வாழ்க்கை எவ்வாறு பாதிக்கப்பட்டது...என்பதை யெல்லாம் கருணா அறிந்துகொள்ள முடியவில்லை. ஒரு வாரத்திற்குப் பின்னர்தான் அவளுக்கு விஷயம் தெரிந்தது!

10

பகல் பத்துமணியிருக்கும். பள்ளிக்கூடத்திற்கு ஸௌமுகியையும், குழந்தைகளையும் அனுப்பிவிட்டு சிரமபரிகாரம் செய்துகொண்டிருந்தாள் கருணா. திடீரென்று அங்கே தோன்றினாள் ஸௌமுகி—கையில் பிரித்த ஒரு கடிதத்துடன்! அவள் முகம் குங்குமம்போல சிவந்துகிடந்தது. கலைந்த கூந்தலும் வீங்கிய கண்களும், தூக்கிய இமையுமாய் நின்ற அவள் தோற்றம் காளிகாதேவியைப்போல் இருந்தது. அவளைப் பார்த்ததும் வாரிசுருட்டிக் கொண்டு எழுந்தாள் கருணா.

"இது என்ன ஸௌமுகி? ஏன் அலையக் குலைய ஓடிவந்திருக்கிறாய்? என்ன சமாசாரம்?" என்று அவள் பதற்றத்துடன் கேட்டதும், ஸௌமுகி ஒரு கோபச் சிரிப்பு சிரித்தாள்.

"என்ன சமாசாரமா? சித்தி—தூ—சித்தியுமாச்சு பொத்தியுமாச்சு—என் வாழ்வுக்கே உலைவைத்த உனக்கு மரியாதை வேறு வேண்டுமா? கருணாவாம் கருணா—பெயர்மட்டும்தான் கருணா, ஆனால், உள்ளத்திலோ கருணை கடுகளவுகூட இல்லை. கருணைக்கிழங்குதான் உன் மனம். அடி பாவி! உன் மனசிலே துளியாவது இரக்கமிருக்குமானால், இப்படி அநியாயமாய் என்மேலே அவதூறு சொல்லியிருப்பாயா? மானேஜரையும், என்னையும்பற்றி என்னென்ன அளந்திருக்கிறாய் அவரிடம்? அபாண்டம் கூறிய உன் நாக்கு அழுகாதா? இதோ எழுதியிருக்கிறாரே அவர், "இவ்வளவு நாள் என் கண் மூடிக்கிடந்தது. இப்போதுதான் சித்தி என் கண்ணைத் திறந்து உன் மாயையை விளக்கினாள். நீ இனி வேலையையும் விடவேண்டாம், உன் அருமை மானேஜரையும் விடவேண்டாம்." என்று... போதுமா? உன் பொறாமை மனம் குளிர்ந்ததா? தள்ளாத கிழவர் மேலா இவ்வளவு சந்தேகம்? சண்டாளீ? உன் பொறாமைத் தீயில், என் வாழ்க்கை மலரையே சுட்டுச் சாம்பராக்கிவிட்டாயேடி! அவர் இனி இந்தப் பக்கம் வரவே போவதில்லையாம். என் முகத்திலும் இனி விழிக்கவே மாட்டாராம், யாரோ ஒரு பர்மாக்காரியோடே சிங்கப்பூரிலேயே நிலைத்து விட்டாராம்! அடி துரோகி! உன் ஆங்காரமும் அசிலையும் இவ்வளவு தூரம் போகும் என்று நான் அறியாமல்போய்விட்டேனே! ஐயோ! என்மேல் உயிராயிருந்தவரை எப்படியோ மாற்றி என்னை விஷமாக எண்ணும்படிச் செய்துவிட்டாயே! மூதேவி, உன்மேல் எவ்வளவு அன்பைச் சொரிந்தேன் நான். அதற்குச் சரியான பலன் கொடுத்துவிட்டாய் நீ. ஆனால், என் வயிற்றெரிச்சல் வீண்போகாது. நான் உத்தமி என்பது நிச்சயமானால் நீ செய்த நயவஞ்சகத்திற்கு உனக்கு கைமேல் பலன் கிடைக்காமல் போகாதடி! இன்று கணவனால் அநியாயமாய் புறக்கணிக்கப்பட்டு, என் குழந்தையும் நானும் நிற்பதுபோல நாளைக்கு நீயும் உன் குழந்தையும் தவிக்காதிருக்கமாட்டீர்கள்! கலியுக தெய்வம் கண்மூடி

மௌனியல்ல. உனக்குத்தகுந்த கூலி கொடுப்பான்" என்று ஆவேசம் வந்தவன்போல் தலையிலும் வாயிலும் அடித்துக்கொண்டு ஓவென்று அழுதாள் ஸௌமுகி. கருணா அப்படியே கல்லாய்ச் சமைந்து நின்றாள்.

11

ஆரம்பத்திலிருந்தே ஸௌமுகியின்மேல் கருணாவுக்கு ஒருவிதமான பொறாமையுணர்ச்சி இருக்கத்தான் இருந்தது. ஆயினும், கூடுமானவரையில் அதை அடக்கிவந்தாள். ஆனால், 'சுகுமார் வந்திருந்தபோது, அவள் பொறாமைத்தீ கொழுந்துவிட்டெரியத் தொடங்கிவிட்டது.

அந்த அதிதமான உணர்ச்சிப் பெருக்கில் அவள் ஸௌமுகியின் மேல் அவதூறு சொல்லிவிட்டாளே தவிர, அது இவ்வளவு விபரீதத்திற்குக் கொண்டு விடும் என்று அவள் நினைக்கவேயில்லை. சுகுமார் ஏதோ இரண்டு அதட்டல் போடுவான் என்று அவள் நினைத்தாளேதவிர, இப்படி அவன் அவளையும் ஒன்றும் கேட்காமல், எதையும் தீரவும் விசாரியாமல், அவளை இப்படிக் கைவிட்டு விடுவான் என்று நினைக்கவேயில்லை.

இப்போது ஸௌமுகியின் வார்த்தைகளைக் கேட்டதும் கருணாவின் உள்ளம் கலங்கிப்போய்விட்டது. அவளுக்கு ஸௌமுகியோடு ஆதியில் தான் பள்ளியில் கழித்த இன்பமான நாட்கள் நினைவுக்கு வந்தன. அப்போதெல்லாம் எவ்வளவு அன்போடு இருப்பாள் ஸௌமுகி அவளிடம்! அவளுக்கு ஸௌமுகி புத்தகம் பென்ஸில் பேனா என்று எவ்வளவு உதவி இருக்கிறாள்! எவ்வளவு நாள் தனக்காகப் பரிந்துகொண்டு மற்றவர்களிடம் சண்டைக்கு வந்திருக்கிறாள்! அப்படிப்பட்டவள் வாழ்வைக் கெடுக்கும் விதத்திலா தான் நடந்துகொண்டிருக்கவேண்டும்!

கருணாவின் கருவிழிகளில் கண்ணீர் அருவிபோல் பெருகத் தொடங்கியது. மாடியில் மூட்டை கட்டிக்கொண்டிருக்கும் ஸௌமுகியை எப்படி சமாதானப்படுத்துவது என்று தயங்கியபடியே கூடத்துப் பக்கம் வந்தாள். அவள் மனதில் இருந்த பொறாமை அடியோடு மறைந்து, அதற்குப் பதிலாகக் கழிவிரக்கமும், பச்சாத்தாபமும் அந்த இடத்தில் குடிகொண்டன. ஆனால்,......ஆனால், என்ன பிரயோசனம்? முறிந்துபோன உள்ளங்களை இனி ஒன்று சேர்க்கமுடியுமா?

தயங்கித் தயங்கி அவள் வாசற்பக்கம் வருவதற்கும் அவள் பேருக்கு ஒரு தந்தி வருவதற்கும் சரியாக இருந்தது. பிரித்துப் பார்த்தாள் தந்தியை. "கிருஷ்ண சர்மா இறந்துவிட்டார்" என்று அவருடைய நண்பரொருவர் போர்முனையிலிருந்து அடித்திருந்தார்.

சூன்ய திருஷ்டியுடன் வெலவெலத்துப்போய் கீழே உட்கார்ந்துவிட்டாள் கருணா. அவள் உடல்; உள்ளம் எல்லாமே மறத்துப்போய் விட்டதுபோன்ற ஓர் வித உணர்ச்சியுடன்!

உத்தமியான ஸௌமுகியின் சாபம் பலித்துவிட்டது! கருணா செய்த செயலுக்கு கைமேல் பலன் கிடைத்துவிட்டது!!

வெள்ளிவிழா வெளியீடுகள்

1. தபால் வினோதம் 2. இனிய முரசு

3. ஆண்டவனின் அருள்

மூன்றும் ஒரேசமயத்தில் வாங்குவோர்க்கு ரூ. 3-தான். (ரிஜிஸ்தர் தபாற்செலவு இனம்.) தனித்தனியே வாங்குவோர் ரூ. 1—4—0 வீதம் அனுப்பினால் ரிஜிஸ்தர் போஸ்ட் மூலம் அனுப்புவோம்.

ஸ்ரீ பகவத் கீதாஸாரம்

பதினேழாவது அத்தியாயம்.

மூன்று வித சிரத்தைகளின் பிரிவு

18. மறை பொருந்தாதவை வல்ல அசுரர்க்கு வகுத்தமையும்
மறை பொருந்தும் நிலையம் வண் குணப்படி மூவகையும்
மறை நிலை தன்னை வகுக்கும் குறிமூன்றின் மேன்மையையும்
மறை உமிழ்ந்தான் உரைத்தான் வாசவன்தன் சிறுவனுக்கே.

மறை பொருந்தாதவை—வேதத்துடன் சேராத கருமங்கள், வல் அசுரர்க்கு வகுத்தமையும்—பலமுள்ள அசுர சுபாவம் உடையவர்களுக்கு ஏற்பட்டிருப்பதையும், மறை பொருந்தும் நிலையும்—வேதத்துடன் பொருத்தமுடைய நிஷ்டையையும், வண் குணப்படி மூவகையும்—சிறப்பான ஸத்துவம் முதலிய பிரிவினால் மூன்றுவிதமாக இருக்கும் தன்மையையும், மறை நிலை தன்னை வகுக்கும்—வைதிக கருமங்களின் மூன்றுவித அடையாளங்களுடைய, மேன்மையையும்—உயர்ந்த தன்மையையும், மறை உமிழ்ந்தான்—வேதத்தை பிரகாசம் செய்த கண்ணன், வாசவன் தன் சிறுவனுக்கு இந்திரன் மகனாகிய அர்ச்சுனனுக்கு, உரைத்தான்—சொன்னான்.

அர்ச்சுனன்:- "ஹே கிருஷ்ணா! எவர்கள் சாஸ்திரங்களில் கூறியுள்ள விதியை மீறி சிரத்தையுடன் யாகம் செய்கிறார்களோ, அவர்களுடைய நிஷ்டை ஸத்வகுணமா; ரஜோ குணமா, தமோ குணமா?"

ஸ்ரீகிருஷ்ணன் பின்வருமாறு பதில் கூறினார்:—"எல்லாப் பிராணிகளுக்கும் ஸத்துவம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என சுபாவத்திலேயே உண்டான மூன்று குணங்கள் இருக்கின்றன. எல்லாருக்கும் மனத்துக்குத் தகுந்தபடி சிரத்தை உண்டாகிறது. ஆகவே, மனிதர்களின் மனது எப்படிப்பட்டகுணத்தையுடையதாக இருக்கிறதோ அப்படிப்பட்ட சுபாவத்தை உடையவனாக இருப்பான்.

ஸத்துவ குணம் மேலிட்டவர்கள் தேவதைகளைப் பூஜிக்கிறார்கள். ரஜோகுணம் மேலிட்டவர்கள் யக்ஷர் ராக்ஷதர் இவர்களையும், தமோகுணம் மேலிட்டவர்கள் பிரேதம் பூதம் இவைகளையும் பூஜிக்கிறார்கள்.

எவர்கள் சாஸ்திரங்களில் சொல்லப்படாத கடுமையான தபஸ்ஸை, தம்பம், அஹங்காரம் இவைகளுடன் கூடியவர்களாய், காமம், ஆசை, பலம் இவைகளுடன் கூடியவர்களாயும், மதியீனர்களாய், தங்களைக் கஷ்டப்படுத்திக்கொண்டு செய்கிறார்களோ அவர்களை அசுர சுபாவமுடையவர்கள் என்று நிச்சயம் அறி.

ஆஹாரத்தின் மூன்று வகைகள்.

ஆயுள், ஞானம், பலம், ஆரோக்யம், சுகம், பிரீதி இவைகளை வளர்க்கும் ருசியுள்ளதாயும் உறுதியானதுமான இனிய ஆஹாரம் ஸத்துவகுணம் மேலிட்டவர்களுக்குப் பிடித்தமானவை.

காரம், புளிப்பு, அதிக உப்பு, அதிக சூடு, கடுரமானது, உலர்ந்தது துக்கம் விசனம் நோய் இவைகளை வளர்க்கும் ஆகாரம் ரஜோகுணம் மேலிட்டவர்களுக்குப் பிடித்தவைகள்.

அதிக காலம் கடந்தது, ரஸம் மாறினது, துர்வாஸனை யுள்ளது, எச்சிலானது, சுத்திபற்றது, இவ்விதமான ஆஹாரம் தமோகுணம் மேலிட்டவர்களுக்குப் பிடித்தவை.

மூன்று வித யாகங்கள்

பலத்தில் ஆசையின்றி சாஸ்திரங்களில் சொல்லப்பட்டபடி கவனத்துடன் யாகம் செய்வது ஸாத்விகம் எனப்படும். பலத்தை உத்தேசித்தோ டம்பத்திற்காகவோ செய்வது ராஜஸமாகும். சாஸ்திர முறையின்றியும், மந்திரம், தட்சிணையின்றியும், சிரத்தையின்றியும் செய்யப்படும் யாகம் தாமஸமாகும்.

மூன்று விதமான தவம்

தேவர், பிராம்மணர், ஆசாரியர், பண்டிதர் இவர்களைப் பூஜிப்பது தூய்மை, கபடமின்மை, பிரம்மசரியம், துன்புறுத்தாமை - இவைகள் சரீரத்தினால் செய்யப்படும் தவம் எனப்படும்.

பிறருக்கு அச்சம் தராத பேச்சு, உண்மையானதும் நன்மையானதுமான பேச்சு, வேதம் ஓதுவது, இவை வாயினால் செய்யப்படும் தவம் எனப்படும்.

மனத் தெளிவு, நல்லெண்ணம், மௌனவிரதம், ஆத்மாவில் மனத்தை செலுத்துதல் இவை மனத்தினால் செய்யப்படும் தவம் ஆகும்.

இப்படி மூன்று விதம் சிரத்தையுடன் செய்யும் தவத்திற்கு ஸாத்விகத் தவம் என்று பெயர்.

எந்தத் தவம் தற்புகழ்ச்சியின் பொருட்டும், டம்பத்திற்காகவும் செய்யப்படுகிறதோ அது அழியக்கூடியதாகும். அது ராஜஸத் தவம் எனப்படும்.

அறிவீனர்களின் பிடிவாதத்தினால் தனக்கே மிகக் கஷ்டம் தரும்படியாகவும், பிறரை ஏமாற்றவும் செய்யப்படும் தவம் தாமஸமாகும்.

மூன்று வித தானங்கள்

தனக்கு முன் உபகாரம் செய்யாதவனுக்குத் தகுந்த காலத்தில் அவசியம் தரவேண்டும் என்று, பாத்திரம் அறிந்து செய்யப்படும் தானம் ஸாத்விகம் எனப்படும்.

பதில் உபகாரத்தை எதிர்பார்த்தோ, ஒரு பயனை உத்தேசித்தோ, மிகவும் கஷ்டத்துடன் கொடுக்கப்படும் தானம் ராஜஸம் ஆகும்.

தகுதியற்ற இடம், காலம், பாத்திரம் இவைகளில் கொடுக்கப்பட்டதும், கௌரவமின்றியும், அவமானம்செய்யப்பட்டும் கொடுக்கப்பட்டதுமான தானம் தாமஸமாகும்.

பிரம்மத்தின் மூன்றுவித குறிப்புகள்

ஓம் தத் ஸத் என்கிற மூன்று பதங்களுடன் பிராம்மணர் வேதம் யாகம் இவைகள் சேர்ந்து இருக்கின்றன. அது எப்படியெனில்;

வேதம் ஓதும் மூன்று வருணத்தாரின் யாகம் தானம் தவம் முதலியவை "ஓம்" என்றே தொடக்கப்படுகின்றன,

மோக்ஷத்தை விரும்புகிறவர்களால் பலத்தில் ஆசையின்றி யாகம், தானம், தவம் முதலியவைகள் "தத்" என்கிற பதத்துடன் செய்யப்படுகின்றன.

இருக்கும்தன்மை, சுபமாக உள்ளது, சிறந்தது என்கிற பொருள்களில் "ஸத்" என்கிற பதம் உபயோகிக்கப்படுகிறது.

சிரத்தையின்றி செய்யப்படும் யாகம், தானம், தவம் இவைகள் "அஸத்" எனப்படும். இவைகளால் இவ் வுலகத்திலும் மறு உலகத்திலும் ஒரு பயனுமில்லை.

பதினேழாவது அத்தியாயத்தின் கருத்து: — ஸத்வ குணம் மேலிட்ட சிரத்தையே சிறந்தது.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

1909—1910-இல் குடும்ப வர்த்தமானம்

என் தகப்பனாருக்குக் கோவையில் விவசாயக்கல்லூரியில் வேலை என் தாயாரும் அங்கேயே இருந்தார். குழந்தைகள் வித்யாவும், காந்தாமணியும் அங்கும் இங்குமாக இருப்பார்கள், கோடை லீவுகளுக்கு நாங்கள் கோவை போவது, மற்ற குறைந்தகால லீவுகளில் அவர்கள் சென்னைக்கு வருவது. 1910 மே மாதம் 21-ந் தேதி என் சகோதரி பாலம் வழக்கம் போல சிரமப்பட்டு டாக்டர் மக்னீல் அவர்கள் உதவியினால் ஆயுதப்பிரயோகம் செய்யப்பட்டு ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள். அந்த வருஷ ஆரம்பத்தில் காலடியில் ஸ்ரீ சாரதாம்பிகை பீடம் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தபோது என் பெற்றோர்கள் அங்கு சென்று 1 வாரம் இருந்து வந்தனர். ஆகவே, பிறந்த குழந்தைக்கு சாரதா என்ற பெயர் அமைந்தது.

அதே வருஷம் செப்டம்பர் மாதம் 27-ந் தேதி என் சகோதரி சாவித்திரி பிரஸவித்து டாக்டர் மக்னீல் ஆயுதப்பிரயோகம் செய்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. சாவித்திரிக்கு மூன்றாவது குழந்தையும் பெண்ணாகப் பிறந்த வருத்தத்துடன் என் தாயார் மிகுந்த மனச்சோர்வுடன் உட்கார்ந்திருந்தபோது எங்களுக்கு சிநேகமான ஒரு பாட்டியம்மாள் அந்த சமயம் வந்து சேர்ந்து, "நீங்கள் பக்தியுடன் பூஜை செய்யும் லலிதாம்பிகையே வந்து பிறந்திருக்கிறாள். அவள் பாக்யசாலியாக இருப்பாள். நீங்கள் விவேகி, இப்படி சோர்வடையக்கூடாது" என்று சொன்னாள். ஆகவே சாவித்திரி குழந்தைக்கு லலிதாம்பாள் என்று பெயரிடப்பட்டது.

1909-ஆம் வருஷத்தில் என் பெரியதகப்பனார், உயர்ந்த அந்தஸ்தில் ரெஜிஸ்ட்ரார் - ஜெனரலாகவும், அவ்வப்போது ஜில்லா கலெக்டராகவும், நல்ல பதவியிலிருந்தவர், ஓய்வெடுத்துக்கொண்டு உபகாரச் சம்பளம் பெறுவதற்கு முன்னாலேயே அவரது 55 ஆவது வயது பூர்த்தியாகும் சமயத்தில் சிவபிரான் அடிமலரைச் சேர்ந்தார்—அவர் மிகுந்த அறிவாளி, மேதாவி, பரோபகாரி, பெருந்தன்மை வாய்ந்தவர். கணிதத்தில் ஒரு பாகமாகிய "யூக்லிட்" டில் மகா திறமைவாய்ந்தவராயிருந்ததால் அவரை யூக்லிட் ஸ்ரீனிவாசய்யர் என்றே எல்லாரும் அழைப்பது வழக்கம். அவர் எங்கள் பெரியவர்களது பெரிய ஐக்கிய குடும்பத்தில் கும்பகோணத்தில் படித்து முதன் முதல் பி. ஏ. தேறி பெங்களூரில் ஒரு பாடசாலை உபாத்தியாயராகப் போனார். பிரதிதினமும் அவர் பாடசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்போது அவரது பிதாமஹி அருமையாக மஞ்சள் நீர் சுற்றி "என் அருமை பேரன் பி. ஏ. பாஸ் செய்து உத்தியோகம் பண்ணி கை நிறைய பணம் சம்பாதிக்கிறான். அவனுக்கு கண் திருஷ்டி படக்கூடாது" என்று திருஷ்டி பரிகாரம் செய்வாராம். கும்பகோணம் காலேஜில் அவர் வேலையாயிருந்தபோது ஒரு தடவை எம். ஏ. வகுப்புக்கு வினாத் தாள் தயாரிக்கும்படி அவரை ஒரு பரீக்ஷகராக தேர்ந்தெடுத்தார்களாம். அவர் பி. ஏ. தான். எம். ஏ க்கு வேண்டிய பாகங்களை

இரவும்பகலுமாகப் படித்து அதன் பிறகு பரிக்ஷைக்கு வேண்டிய கேள்வித் தாள் தயாரித்து அனுப்பினோம். பிறகு மயிலேயில் தெற்குமாட வீதியில் சில வருஷங்கள் வசித்தார். அப்போது அவருக்கு ரெவின்யு போர்ட் ஆபீஸில் வேலை. நல்லூரைக் கோவையில் மகாமகோபாத்தியாய டாக்டர் ஸ்வாமிநாதய்யர் அவர்கள் "திருடனைப் பிடித்த விநோதம்" என்னும் வரலாறு என் பெரிய தகப்பனார் வீட்டில் நடந்த ஒரு சம்பவம்.

என் பெரிய தகப்பனார் காலமான சில மாதங்களில் எங்கள் தகப்பனாருடன் கூடப்பிறந்த ஒரே சகோதரி, எங்கள் அருமையான அத்தையம்மாளும் அமலனடி சேர்ந்தார். என் பெரிய தகப்பனாருக்கு 3 புதல்விகள். அத்தையம்மாளுக்கு 5 புதல்விகள் 2 புதல்வர். அவர்கள் காலமாவதற்கு முன்னாலேயே அவர்கள் எல்லாருக்கும் விவாகமாகிச் சௌக்கியமாயிருந்தார்கள். ஆயினும் குடும்பத்தில் அந்த இரு பெரியவர்களது பிரிவு அன்னாரது மக்கட்கும் மற்ற கிட்டிய பந்துக்கள் யாவருக்கும் தாங்க முடியாததாகவேயிருந்தது. எல்லாம் எமையாளும் ஈசன் செயல்.

1910-ம் வருஷம் என் தாயார் காலடிக்குச் சென்றிருந்தபோது எர்ணாகுளம் காலேஜில் வேலையாயிருந்த தேவராஜய்யர் என்பவரின் தாயார் என் தாயாருக்கு மிகவும் வேண்டிய வேதாந்தத் தோழியாகிய மலையாளப் பாட்டியென்று நாங்கள் அழைக்கும் பெரியவள், விதவையாகிவிட்ட தன் பெண்வயிற்றுப் பேத்தியாகிய 18 வயதுள்ள அம்முக்குட்டி பெண்பவளை என் தாயிடம் கொண்டுவந்துவிட்டு "இவளுக்கு ஏதேனும் ஒரு நல்வழியைக் காண்பி. உன் பெண்ணைப் படிக்கவைத்திருப்பதுபோல இவளையும் நீ படிக்கவைத்தாலும் சரி, அல்லது உன் வீட்டில் காரியத்துக்கு வைத்துக் கொண்டாலும் சரி" என்று சொன்னாள்: ரவிக்கையில்லாமலும், எண்ணெய் கண்டு நாளான பரட்டைத்தலையுடனும் வந்த அந்தப் பெண்ணுக்கு 2 ரவிக்கை தயாரித்துக்கொடுத்து, தலைக்கு எண்ணெய்வைத்து வாரிக் கொள்ளச்செய்து பட்டணத்துக்கு அனுப்பினார். அவளை P. T. ஸ்கூலில் தமிழ் பிரிவில் 4-ஆவது வகுப்பில் சேர்த்தோம். எங்கள் வீட்டிலேயே இருந்துகொண்டு படிக்கலானாள். இவளே என்னுடைய விதவாச்ரமத்தின் முதல் மாணவி.

என் முதல் உத்தியோகம்

சென்னை ராஜதானியிலேயே முதன்முதல் பி. ஏ. முடித்துப் பட்டம் பெற்ற பிராம்மணப் பெண் நான். எனக்கு முன்னால் மைசூரில் ஸ்ரீமதி ருக்மிணியம்மாள், ஸ்ரீமதி ஸ்ரீரங்கம்மாள் இருவரும் பி. ஏ. பட்டதாரிகள். மைசூரிலும், திருவனந்தபுரத்திலும், இலங்கையிலுள்ள ராமநாதன் காலேஜுக்குத் தலைவியாகவும் என்னை வேலைக்கு அழைத்தனர். என் தாயார் தன்னைவிட்டுப் பிரிந்து நான் வெளியூர்களுக்குப் போவதில் இஷ்டப்படவே இல்லை, உள்ளூரிலேயே என் பொழுதுபோக்குக்காக வீட்டுக்கெதிரில் நான் படித்த P. T. ஸ்கூலிலேயே வேலைகிடைக்குமா என்று விசாரித்தோம். P. T. ஸ்கூலில் அந்தசமயம் மிஸ் பாடர்ஸன் என்பவர் தலைவியாயும், இன்ஸ்பெக்ட்ரஸ் மிஸ் லிஞ்ச் என்பவருமிருந்தார்கள். P. T. ஸ்கூலில் வேலைசெய்ய நான் இஷ்டப்பட்டதற்கு முக்கிய காரணம் ஒன்று.

உபாத்திமைப் பயிற்சிப் படிப்பாகிய எல். டி. க்கு அந்தக்காலத்தில் சைதாப்பேட்டையிலுள்ள டீசர்ஸ் காலேஜுக்குத்தான் போகவேண்டும். ராஜதானிக் கல்லூரியில் மாணவர்களுக்கிடையிலிருந்து படித்ததே ஒரு பெரிய சிரம சாத்தியமான காரியமாக எனக்கிருந்தது. டீசர்ஸ் காலேஜில் மாணவர்களுக்கு எதிரில் வகுப்புகளுக்குப் பாடம் நடத்தவேண்டும். அது

—5—1949

என்னால் முடியவே முடியாதென்று தோன்றிற்று. அங்கு சென்று படிப்பதை நினைக்கும்போதே எனக்கு நடுக்கமுண்டாயிற்று.

அந்தக் காலத்தில், தகுந்த காரணத்துடன் கேட்டுக்கொள்பவர்களை காலேஜுக்குப்போய் படிக்காமலே பிரைவேட்டாகவே படித்து எல். டி பரிக்ஷைக்குப் போவதற்கு அனுமதிப்பது வழக்கமாயிருந்தது. பி. டி பாடசாலையில் எலிமெண்டரி, ஸெகண்டரி இரண்டு டிரெயினிங்கும் அந்தக் காலத்திலிருந்தன. ஆகவே, அந்தப் பாடசாலையில் வேலையெடுத்துக் கொண்டால், உபாத்திமைத் தொழிலுக்கு வேண்டிய அனுபவப் பழக்கம் எனக்கு நிரம்பக்கிடைக்கும்; ஆகவே, சில மணிநேரங்கள் வகுப்புகளில் பாடம் கற்பிக்கவும், உபாத்திமைப் பயிற்சி மாணவர்களுக்காகக் தொடுக்கப்படும் மாதிரிப் பாடங்களையும், மற்றப் பாடங்களையும் நான் கவனிப்பதற்கு வேண்டிய அவகாசமும் எனக்குக் கொடுக்கும்படி விண்ணப்பம் செய்துகொண்டேன். என் விண்ணப்பத்தை அங்கீகரித்து ஆகஸ்டு முதல்தேதி வேலை ஒப்புக்கொள்ளும்படி ஆர்டர் வந்தது.

இதனிடையில் ஜூலை மாதத்தில் என் தாயாருடைய தங்கை பெண் லலிதா என்னும் செல்லம் வந்து பிரஸவித்து, என் தங்கைகள் பாலம், சாவித்திரியைவிட அதிக கஷ்டத்துடன் டாக்டர் மக்னீல் வந்து மயக்கம் கொடுத்து ஆயுதம் பிரயோகித்து ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அப்போது எனக்கு படிப்பு உத்தியோகம் இரண்டுமின்றி வீட்டிலிருந்ததால் செல்லத்துடன்கூட இருந்து தூர்ப்பலமாயிருந்த அவளுக்கு வேண்டிய பணி விடைகள் செய்தேன். மண்டையில் ஒருபக்கம் ஆயுதத்தினால் அடிபட்டு, தொண்டையிலுள்ள சதை வேலை செய்யாததால், குழந்தை பால்விழுங்க முடியாமல் 5-ஆவது வருஷம் எம். பி. ஸி. எம் படித்துக்கொண்டிருந்த சாவித்திரி கணவரது வைத்தியத்தினால் குழந்தை காலக்கிரமத்தில் பால் குடிக்க ஆரம்பித்து வளர ஆரம்பித்தது. பிறகு ஆகஸ்ட் மாதம் முதல்தேதி வியாழக்கிழமை நான் சந்தோஷமாகப் படித்த என் பழைய ஸ்கூலேயாகிய P. T. பாடசாலையில் 50 ரூபாய் சம்பளத்தில் வேலை ஒப்புக்கொண்டு மிகுந்த உத்சாகத்துடன் வேலைசெய்ய ஆரம்பித்தேன்.

P. T. ஸ்கூலில் அந்தக் காலத்தில் 3 பிரிவுகள் உண்டு. (a) ஆங்கிலப் பிரிவு. இதில் முதல்வகுப்பிலிருந்து மெட்ரிக்யுலேஷன் வரையுமுள்ள ஒரு ஹைஸ்கூல் ஸெகண்டரி டிரெயினிங்கு. (b) தமிழ்ப் பிரிவு. 8-ஆவது வகுப்புவரைக்கும் ஒரு எலிமெண்டரி ஸ்கூலும், ஹையர் எலிமெண்டரி டிரெயினிங்கும். (c) தெலுங்குப் பிரிவு 8-ஆவது வரைக்கும் ஒரு எலிமெண்டரி ஸ்கூலும், ஹையர் எலிமெண்டரி டிரெயினிங்கும். நான் அங்கு வேலைக்குப் போவதற்கு இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பே, தெலுங்குப் பிரிவை மூடிவிட்டு அந்த உபாத்தினிகளை தெலுங்கு தேசத்துக்கு மாற்றிவிட்டார்கள்.

நான் வேலைக்குச் சேர்ந்தபோது எனக்கு 4 ஸெக்ஷனிலும் சம்பந்தம் ஏற்பட்டது. அந்த வருஷந்தான் முதன்முதல் ஹைஸ்கூலில் லத்தீன் பாஷையைவிட்டு தமிழை இரண்டாவது பாஷையாகக் கற்பிக்க ஆரம்பித்தார்கள். ஆகவே, ஹைஸ்கூலில் இயற்கைப் பாடம், தமிழ், ஆங்கிலம் இவற்றை சில வகுப்புகளுக்கு நான் கற்பித்தேன். தமிழ் ஹையர் எலிமெண்டரிக்கு கணிதமும் இயற்கைப் பாடமும், ஆங்கில ஸெகண்டரி வகுப்புக்கு இயற்கைப் பாடமும் கற்பித்தேன். மாதிரிப் பாடங்கள் நடத்துவதுகூட எனக்கு முறை ஏற்பட்டது. அநேகமாய் பிரதிதினமும் மாலையில் என் எல். டிக்கு வேண்டிய ஸைகாலஜி (மனோதத்துவபாடம்) என்னும் பாடத்தை ஸ்கூல் தலைவி மிஸ் பாடர்ஸனுடன் படிப்பேன். 1912-ஆம் வருஷம், ஏப்ரல் மாதத்திலேயே எல். டி பரிக்ஷைக்குப் போவ

தற்கு அனுமதி கிடைக்கவில்லை. மறுவருடம் 1913-ஆம் வருஷத்தில் எல். டி., முடித்தேன்.

1911-ஆம் வருஷம் நவம்பரில் நடந்த கான்வோகேஷனில் பி. ஏ. பட்டமும் கிரிக் மெடலும் (Grigg Medal) பரிசு பெற்றேன். 1913-ஆம் வருஷம் எல். டி., பட்டம் பெற்றதுடன் என் கல்வி முடிவுபெற்றது.

1911-ல் பி. ஏ. பரிக்ஷை ஆனவுடனேயே வீட்டிலேயே ஒரு உபாத்தியாயரிடம் நானும் என் சகோதரி சாவித்திரியும் ஸம்ஸ்க்ருதம் படித்தோம். சில மாதங்கள்தான். அதற்குமேல் அவகாசமில்லை. சாவித்திரியின் கணவர் M. B. C M. முடித்துவிட்டு, என் பெற்றோர்கள் அவர் தாயார் முதலானவர்களின் ஆசியுடன் I. M. S. க்கு படிப்பதற்காக லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார். அத்தனை தூரம் அவர் போவது எங்களுக்கெல்லாம் முதலில் இஷ்டமில்லை. அவர் மிகவும் பிடிவாதமாக இருந்து ஆசைப்பட்டதால் நாங்கள் எல்லாரும் சம்மதித்து அவரை வழியனுப்பினோம்.

உலகம் கண்ட நல் நாட்கள்

அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்களும் ஆசார்யர்களும் இந்த உலகில் இருள் நீங்க வந்துதித்த மாதங்கள் நாள்கள் தம்மை மண்ணுலகோர் தாம் அறியத் தீது அகல நிற்கும் திரு.

பங்குனித் திங்கள்

ஆழ்வார்கள் அவதரிக்கும் பேறு பெறாத இம்மாதம், மகாலக்ஷ்மியின் திருவவதாரத்தால் சிறப்புற்று விளங்குகிறது. தவிர, ஆசார்ய சார்வபௌமர்களான அமுதனாரும் நஞ்சீயரும் உதித்த உன்னத மாதம்.

பங்குனி உத்திரத்தில் பெரிய பிராட்டியாரும், நஞ்ஜீயரும், ஹஸ்தத்தில் திருவரங்கத்து அமுதனாரும் தோன்றியருளினர்.

பெரிய பிராட்டியார் புருஷகார பூதை.

திருவரங்கத்தமுதனார் இராமாநுச நூற்றந்தாதி —ப்ரபன்ன சாயத்ரி— என்னும் அமுதக் கலித்துறை நூற்றெட்டும் உபகரித்த உத்தமர்.

ஸ்ரீ பட்டர் திருவருளுக்கு இலக்காகித் திருத்திப் பணிகொள்ளப்பட்டு, ஸித்தாந்த ப்ரவர்த்தகராய் ஒன்பதினாயிரப்படி என்னும் திருவாய்மொழி வ்யாக்கியானம் இயற்றியருளிய மஹான் நஞ்ஜீயர்.

வை. மு. ஸ்ரீ. நவீனங்கள்.

S. 1.	உதய சூரியன்	1—4
S. 2.	மதமா, மனமா?	1—4
S. 3.	அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி	1—8
S. 4.	ராணி சீலாவதி	1—0

ப்ர.ப.அண்ணங்கராச்சாரியர்
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் உரையுடன் ரூ. 1.

தாரண நந்தவனம்
(700 பக்கங்கள் 100 படங்களுடன்)
100 சகோதரிகள் சிருஷ்டித்த
நறுமலர் மாலை ரூ. 9.

இந்தமாதம்

சித்திரைத் திங்கள்

ஆழ்வார் ஒருவரும் ஆசார்யர்கள் எழுவரும் அவதரித்துள்ள தனிச்சிறப்புள்ளது இந்தமாதம்.

தினகரன் மேஷத்தில் ப்ரவேசிக்கிறான். புத்தாண்டும் பிறக்கின்றது. விரோதி என்னும் பெயர் பூண்ட இவ்வாண்டு நமது ஸ்வரூப உபாய புருஷார்த்த விரோதி வர்க்கங்களைக் கிழங்கெடுக்கும் விறுடையது; இது சத்யம்.

இராமாநுஜ திவாகரனே தோன்றினால் கலியிருள் நீங்கத் தடையேது?

இம்மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் மதுரகவி ஆழ்வாரும், க்ருத்திகையில் உய்யக்கொண்டாரும், சுவாதியில் திருமலை நம்பியும், திருவாதிரையில் நம் இராமாநுசனும், புனர்வஸுவில் கந்தாடைக் குலதீபன் முதலியாண்டானும், சித்திரையில் அனந்தாழ்வானும், ஹஸ்தத்தில் கிடாம்பி ஆச்சானும், சித்திரையில் அம்மாள் என்னும் சிறப்புப் பெயர் படைத்த வரதாசாரியரும் முறையே திருவவதரித்து பக்தர்களை உய்யக்கொண்டனர்.

ஆசார்யாபிமானமே மோக்ஷஹேது என்னும் சரமபர்வ நிஷ்டையை "தேவும் மற்றறியேன்" என்றருளிய மதுரகவிகள் காட்டிய மார்க்கத்துக்கு லக்ஷ்யபுருஷனாக எதிராசனையும் தந்து விட்டது இந்த மாதம்.

"பூமான் பிறந்து சிறந்தது பாற்கடல் புவிபடைத்த
கோமான் பிறந்து சிறந்து நான்மறை கூடற்சங்கம்
நாமான் பிறந்து சிறந்து பண்டு எதிராசன் என்னும்
சீமான் பிறந்து சரணாகதியும் சிறந்ததுவே"

[எம்பெருமானார் மேல்நாட்டினின்று திரும்பியதும் திருவரங்கம் பெரிய கோயிலார் பாடியது.]

"வையம் குருடன்றோ! மாமறையும் பொய்யன்றோ!!
ஐயன் உரைத்த தமிழ் ஆர் அறிவார்? — வையத்துக்(கு)
ஊன்றுகோல் எந்தை எதிராசர் உத்தரித்த
மூன்றுகோல் காண்பதற்கு முன்.

வாழி எதிராசன் வாழி எதிராசன்
வாழி எதிராசனென வாழ்த்துவோம்!!

— ஸ்ரீ வைஷ்ணவதாஸன்

22

ஸ்வாமிகள் விடுவிடென்று சென்றுவிட்டதும் ஸுசீலாவுக்கு உலகமே கிடுகிடென்று நடுங்கி ஆடுவதுபோல் தோன்றியது. ஸ்வாமி செல்லும் திக்கைப் பார்த்தாள். ஒரு அசுர பலமும் தைரியமும்கொண்டு தடதடவென்று ஓடிப்போய் மறுபடியும் அவர் காலில் விழுந்து "ஸ்வாமீ! மகான்களுக்கு இதுபோல் பராமரித்துச் செல்வது தர்மமா? சரணம் என்று காலில் விழுந்தவர்களைத் தருணம் காக்காமல் காட்டிக்கொடுப்பது தங்களைப்போன்ற மகரிஷிகளுக்கு அடுக்குமா? எதிரிகள் இந்த கோ பூஜாமடத்திற்குள்ளேயே ப்ரவேசித்துவிட்டார்களே! மறுபடியும் என்னை அவர்களிடம் அகப்படவிடாமல் காப்பாற்றவேண்டும். புத்திகெட்டு சாக்கடையில் விழுந்து நானே தட்டித்தடுமாறி எழுந்துவந்திருக்கையில் திரும்பவும் அந்த சோதாக்களிடம் அகப்பட்டுக்கொண்டு தண்டனையடையாது காப்பாற்றவேண்டும். இப்பொழுது என்னை இப்படியே உதாசீனம் செய்துவிட்டால், சத்யமாக நான் இப்போதே ப்ராணத்யாகம் செய்துகொண்டு என் பாழும் பிறவிக்கு முடிவைத் தேடுவேனேயன்றி, என்னுடைய பிணத்தின் ஒரு துண்டு மாமிசத்தைக்கூட அந்த அக்ரமக்காரப் பாவிகளிடம் கிடைக்கும்படிக்கு விடமாட்டேன். சரணம் என்று காலில் விழுந்த ஒரு ஜீவனை நிர்க்கதியாக்கி ப்ராணனை விடும்படிச் செய்வதில் தங்கள் போன்ற மகான்களுக்குப் பாபமேயன்றிப் புண்ணியமில்லை. நான் செய்துள்ள அக்ரமங்களை, அவகேடான நெறி தவறிய முறைகளைத் தங்களிடம் முறையிட்டும் நான் எதற்காக உயிர்வாழ விரும்புகிறேன் என்றால், என்னுடைய சரிதையைக்கண்டு அறிந்து இனிமேலுள்ள இளம் மங்கையர் இத்தகைய அனியாய மோகத்தில் மூழ்காது தடுத்து ஆட்கொள்ள வழியுண்டாக்குவதற்கும், என் முன்னறி தெய்வங்களின் காலில் விழுந்து கடைசீ காலத்திலாவது பணியாற்றி என் பாபத்தைக் குறைத்துக்கொள்ளும் ஒரு ஆசையினாலும்தான் மானங்கெட்டு வாழாமை முன்னினிதே என்றதை மாற்றி மானங்கெட்டும் வாழ முனைகிறேன். அபயம்! அபயம் ஸ்வாமீ! அபயங்கொடுத்து ஆதரிக்க வேண்டுகிறேன்" என்று ஆவேசத்துடனும் ஒரு வீர மங்கையின் உணர்ச்சியுடனும் சொல்லியதைக்கேட்ட ஸ்வாமிஜீ உண்மையில் சற்றுத் திகைத்துப்போய் நின்றார்.

அடுத்த க்ஷணம் ஸ்வாமிகள் தாழ்ந்த குரலில்..."பெண்ணே! எழுந்திரம்மா! உன் வார்த்தையில் த்வனிக்கும் அழுத்தம், உன் வசனத்திலுள்ள அழகு இரண்டும் உனது இதயத்திலிருக்குமா? என்பதுதான் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஏனெனில், உலகத்தை காலக்கண்ணாடியின்மூலம் வெகுவெகு கூர்மையாக நான் பார்க்கிறவன். மனிதர்களின் ஆவேசம் நிலைத்த ஜீவனுள்ளதாக

இருக்கவேண்டுமேயன்றி, சோடாவாட்டர் காஸ்போல் அப்பொழுது உணர்ச்சி எழும்பி உடனே ஆறிவிடுவது மனிதத் தன்மைக்கே புறம்பானது. உலகத்தில் எது சாச்வதம், எது அநித்யம், எதை அசைக்க முடியும், எதை அசைக்கமுடியாது என்றதை முதலில் ஒவ்வொரு மனிதரும் எண்ணிப்பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போதுகூட மனத்தை அழுக்காறு எண்ணங்களில் புகவிடாது தூய பரிசுத்தமான நிலையில் நிறுத்திப்பார்த்தால்,—அசைக்க முடியாத மலையைக்கூட ஒரு கல்தச்சனின் சிறு உளியும், அவனுடைய உழைப்பும் சிதைத்தும், வேறு உருவத்தில் மாற்றியும் அசைத்துவிடுகின்றன... அதைவிட அழுத்தமான இதயத்தில் வைரம் போன்ற திடசித்தமும், நம்பிக்கையும், பக்தியுந்தான் அசைக்க முடியாத ஆழமாய் ஸேது அணைபோன்ற உறுதியுடன் வைத்துக் கொள்ளவேண்டியது....என்ற தத்துவம் மனத்தில் புலனுகும்.

மற்றொன்று: யானையின் கண்களைக்கொண்டு நாம் உலகத்தைப் பார்க்கவேண்டும். யானைக்கு உருவம் மிகப் பெரிதாயிருக்கிறது. ஆனல், பகவான் செய்துள்ள விசித்ரம் கூறத்தரமே இல்லை. அதற்குக் கண்ணை மிகச் சிறிதாக வைத்திருக்கிறார். ஆச்சரியத்திலும் ஆச்சரியம் என்னவென்றால், அதன் கண்ணால் பார்க்கும் ஒருஎறும்புகூட ஆனையின் கண்களுக்குத் தன்னைப்போல் பெரிய உருவமாகத் தெரியும்படிக் கடவுள் அமைத்திருக்கிற சூக்ஷ்ம விசித்திரம் அனேகருக்குத் தெரியாது. அதனல்தான் ஆனை எதைக்கண்டாலும் பயந்து நடுங்குகிறது. சிறிய ஆட்டுக்குட்டியைப் பார்த்தாலும் அது தன்னைப்போன்ற ஒரு ப்ராணி வந்திருப்பதாகவே எண்ணிப் பயப்படுகிறது. அதன்மூலம் அதன் கொழுப்பை அடக்கும் சக்தியைக் கடவுள் காட்டியிருக்கிறார்.

அதுபோல் நாம் பரந்த நோக்கத்துடன் தூய இதய உணர்ச்சி பொங்க உலகத்தைப் பார்த்தோமேயானல், அப்போதுதான் ஆனையின் கண்ணுக்கு சகலமும் பெரிதாகத் தெரிவதுபோல் நமக்கும் பரிசுத்தமாயும் விசாலமாயும் தெரியும். அம்மாதிரி நோக்கத்துடன் எதையும் பார்க்காததால்தான் நீ இந்த கதிக்கு வந்திருக்கிறாய். இத்தனை ஊழல் பண்டமாகிய உன்னை எப்படி நம்புவது? இன்று உனக்கு நாங்கள் செய்த உபகாரத்திற்குப் பலனய் ஒரு நெருப்புத் துண்டை பஞ்சுப்பொதியில் வைத்ததுபோல், உன்னல் எங்கள் கோபூஜா மடமே......

இதற்குமேல் ஸுசீலாவினல் பொறுக்க முடியவில்லை. முன்னிலும் அதிகரித்த வீராவேசத்துடன் பேசத்தொடங்கி, "ஸ்வாமீ! ஆண்டவனையும், பாப புண்ணியத்தையும், ஜனன மரண பயங்கரத்தையும் அடியோடு மறந்து ஆடாத ஆட்டமெல்லாம் ஆடித் தேடாத பாதக மூட்டைகளை எல்லாம் தேடிக் கட்டிக்கொண்டபிறகு, கண் திறக்கப்பட்ட எவரும் மறுபடியும் சாக்கடைப் குப்பையில் விழுந்து நாறமாட்டார்கள். இதற்கு எத்தனையோ மகான்களின் சரித்திரங்களே ஆதாரமாயிருக்கின்றன,

அவை நீங்களறியாதவையல்ல. தாங்கள் உபாஸிக்கும் தெய்வத்தின் மீது ஆணையாய், தாங்கள் பூஜிக்கும் கோமாதாவின் மீது ஆணையாக நான் சொல்வதை நம்புங்கள். இன்னும் என்னை நீங்கள் பரீட்சிக்க வேண்டுமானல், தாங்கள் எத்தகைய தண்டனையை விதித்தாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதன் பிற காவது என்னை நம்பி எனக்கு ஆதரவளியுங்கள். புற இருளைப் போக்கி, புனிதத் தாமரையை மலரச்செய்வான் சூரியன்; அக இருளைப்போக்கி அகத் தாமரையை மலரச்செய்வார்கள் அறிஞர்கள்—என்பது பெரியாரின் வாக்கு..."

என்று அவள் முடிப்பதற்குள் இவள் பேசும் வார்த்தைகளையும் பதப்ரயோக உச்சரிப்புகளையும் பார்த்து ப்ரமித்த ஸ்வாமிகள்... "பெண்ணே! உன்னுடைய சூழல் நிர்க்கந்த வாழ்க்கையில் இத்தனை சிறந்த கருத்துகள் நிறைந்த விஷயங்களும் வாசகங்களும் உனக்கு எப்படித் தெரிந்தன?" என்றார்.

ஸுசீலா:—ஸ்வாமீ! நான் செய்த மகத்தான பாபக் குவியலின் மத்தியில் புனிதமான காற்று எங்கேயோ வீசியது என்று தான் நினைக்கிறேன். சினிமாவில் நான் நடித்த கதைகளை எழுதியவர்கள் தமது திறமைகளைக் காட்டி ப்ரகாசிப்பதற்காகச் சிறந்த விஷயங்களைக்கொண்ட வசனங்களைத் தயார்செய்துகொடுத்து இருக்கிறார்கள். அந்த விஷய ருசியை அப்போது நான் அறிந்து உணர்ந்து நடக்கவில்லை. எனினும் மனப்பாடம்செய்து ஒப்பிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்ததால் இத்தகைய வசனங்கள் உருவாகி இருந்தன. இந்த விஷயங்களின் அழகும் வசீகரமும் இப்போதுதான் தெரிகிறது. சமயத்திற்குத் தகுந்தாற்போல் இப்போதுதான் தானாகவே பதங்கள் வருகின்றன. இதைத் தவிர நான் எந்த உயர்ந்த க்ரந்தமும் படித்ததில்லை, ஸ்வாமி! அந்த எண்ணங்கூட எனக்குக் கனவிலும் உதிக்கவில்லை! நடிப்பு, நடிப்பு என்ற துடிப்பினால் என் வாழ்க்கையே பாழாகிவிட்டது...ஸ்வாமி! என் விரோதிகள் இதே இடத்தில் வட்டமிடுவதால் எனக்குப் புகலிடங் கொடுத்து ரட்சிக்கவேண்டும்..என்று மன்றாடி வேண்டினாள்.

ஸ்வாமிஜி:—பெண்ணே! உன் மாதிரி நெறி தவறி நடந்த சில அல்ப நாய்களைச் சிறந்த மகாத்மாக்கள் எத்தனையோ புத்திமதிகள் சொல்லி இருவரையும் பிரித்துவைத்துப் பலவிதத்திலும் அவர்களைச் சீர்படுத்த முயன்றும், அந்த மானங்கெட்ட ஆணும் பெண்ணும் 'நாயைக் கழுவி நடுவீட்டில் வைத்தாலும் அது வாலைக் குழைத்துக்கொண்டு குப்பைமேட்டிற்கே ஓடும்' என்கிற பழமொழிப்படிக்கு, கேவலமான சாக்கடையிலேயே மறுபடியும் விழுந்து சற்றும் வெட்கம், மானம், உடம்பில் சூடு, சுரணை ஒன்றுமே இல்லாத நாயைவிடக் கேவலமான நிலையில் குழந்தை குட்டிகளையும் வேறு பெற்றுக்கொண்டு தனக்கு மிஞ்சியவர்கள் இல்லை என்கிற இறுமாப்புடன் கண்ணியம் நிறைந்த மனிதர்களின் முன்பு வெட்கமில்லாது உலாவுகிறார்கள். இந்த மடம்போன்ற சிறந்த

இடங்களுக்கெல்லாம் தம் பவிஷை மறந்து உலக்கைபோல் வந்து நிற்கின்றார்கள். இத் தகைய தூமகேதுகளின் கோஷ்டியில் நீயும் சேர்ந்தவர்களாக இருந்தால் என்ன செய்வது?...என்றுதான் நான் யோசிக்கிறேன். புத்தி கெட்டுப்போய்விடினும் பிறகு திருந்தி விட்டால் அவர்களை ரட்சகன்கூட மன்னிக்க மார்க்கம் உண்டு... ஆகையால், இன்னும் ஒரு வார காலம் உனக்கு நான் ஒரு பரீட்சை வைப்பேன். அதில் நீ தேறி ஜெயித்துவிட்டால் பிறகு பதில் சொல்லுவேன்."

என்று கூறிப் பின் ஒரு இடத்திற்கு இவளை அழைத்துச் சென்று அங்கிருந்த ஒரு கிழவியிடம் இவளை ஒப்புவித்து ஏதோ சொல்லிவிட்டுப் போனார்.

மிகவும் சிறிய ஒரு குடிசையில் மினுக்கு மினுக்கு என்று எரிந்துகொண்டிருந்த ஒரு விளக்கு வெளிச்சம் தெரிந்தது. கிழவி மறுபேச்சு பேசாமல் சமிக்ஞையினாலேயே உள்ளே அழைத்துச் சென்றாள். ஒன்றுமே புரியாத ஸுசீலா அந்த குடிசைக்குள் சென்று நின்றாள். கிழவி குடிசைக் கதவை இழுத்து மூடிவிட்டு ஒருவிதமான பதிலுமே பேசாமல் நிம்மதியாகப் படுத்து இழுத்துப் போர்த்துக்கொண்டாள். இந்த செய்கையைக் கண்டு ஒன்றுமே புரியாத ஸுசீலா சற்று திகைத்து நின்றாள். பிறகு மெல்லிய குரலில் "பாட்டி! பாட்டி!" என்று கூப்பிட்டாள். ஆனால், பதிலே இல்லை. எத்தனையோ தைரியமாயும் த்யாகத் தீயில் குதிக்க வேண்டும் என்கிற படபடப்புடனும் இருந்தபோதிலும், அவளை யறியாத ஒருவிதமான பயம் தோன்றிச் சற்று திடுக்கிடச்செய்தது.

23

ஸாரதாம்பாள் பயித்தியத்தை வண்டியில் ஏற்றிக்கொண்டு தான் இறங்கியுள்ள வீட்டிற்கு வந்துசேர்ந்தாள். பயித்தியம் பிடித்திருந்தபோதிலும் அவளால் பிறருக்கு எத்தகைய உபத்திரவமும் கிடையாது. பார்ப்பவர்களுக்குப் பரிதாபமாகிவிடும்படி இருக்கிறாளேயன்றி 'ஐயோ! பயித்தியமா வந்துவிட்டது.' என்று பயந்து நடுங்கி ஓடும்படியாக நடந்துகொள்வதேயில்லை...

இங்கு வந்த உடனே மிரளமிரள விழிக்கிறாளே யன்றி வாயே திறக்கவில்லை. ஸுசீலாவைப்போன்ற இளம்வயதுப் பெண்களைப்பார்த்ததும் "நீ என் ஸுசீலா இல்லையா?... அம்மா! நீ யாரு? ஸுசீலாதானே; சற்றுமுன் கட்டைபோலிருந்தாயே; இப்போ எப்படி இருக்கிறாய்?...இதோ உன்னைத் தொட்டுப்பார்க்கட்டுமா? என்று கேட்டு தொட்டுப்பார்த்தாள்...

"அடாடா!.......சாரதாம்பா! சாரதாம்பா!...ஸுசீலா பஞ்சுபோலாயிட்டாளே!" என்று குதித்தவாறு பேரானந்தத்திலாழ்ந்து பூரிப்பாள். அடுத்த நிமிஷமே "ஸினிமாவைக் கொளுத்திவிடுங்கள்; ஸினிமாவை எரித்துவிடுங்கள். ஐயோ! ஸுசீலாவை சினிமா

கொண்டுபோய்விட்டதே!" என்று அழுவான். இதைத்தவிர ஒன்றுமே செய்யத் தெரியவில்லை, பாவம்! எத்தனை க்ரோதமும் இவர்களிடம் த்வேஷமும் இருந்ததோ அத்தனைக்கத்தனை மாறிப்போய் அவளிடம் அன்பும் அனுதாபமும் உண்டாகிவிட்டதால், அன்றே சாரதாம்பாள் பைத்தியக்காரியை அழைத்துக்கொண்டு தன் ஊருக்கே வந்துசேர்ந்தாள்.

வயதாகிய நிலைமையிலும் தனதுஆத்மார்த்தகமான சங்கீதத்தை விடாது தன்போக்காகச் சதா சர்வகாலமும் பாடிக்கொண்டே சங்கீதத்தின் உண்மையான ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஸாரதாம்பாளின் கணவர் இவர்களை முதலில் பார்க்கவே இல்லை. "நித்யானந்தத்தை நாடு, பர நிர்மல ஸுகந் தேடு—மனமே"... என்ற பாட்டை வெகு ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருந்தார்.

இதே பாட்டை ஆதியில் ஸுசீலாவுக்கு சொல்லிக்கொடுத்ததும் அப்போது இதைக்கேட்டிருந்ததும் பங்கஜத்திற்கு ஏதோ பழய நினைவைக் கிளறிவிட்டதுபோல் ஒரு உணர்ச்சி உண்டாகியது. இதே பாட்டைப் பாடும் கிருஷ்ணமூர்த்தியின் உள்ளத்திலும் ஆதிகாலத்தின் உணர்ச்சிகள் சடக்கென்று உண்டாகியதால் "உம்... பாவிப்பெண்ணே! இப் பாட்டை உனக்குச் சொல்லிக்கொடுத்தபோது இதன் அர்த்தத்தையும் விடாது சொல்லிக்கொடுத்தேனே! அதை உன் மனத்தில் அப்போதே வாங்கி இருந்தால் உனக்கு இந்த கதி வந்திருக்குமா? உன் வாழ்வை நீயே குலைத்துக்கொண்டதோடு, எங்கள் குடும்பத்திலும் புகுந்து நாசத்தை விளைவித்தாயே!"

என்று வாய்விட்டுச் சொல்லியபோது ஸாரதாம்பாள் பங்கஜத்தை இழுத்துக்கொண்டு அங்குவந்து..."தௌர்பாக்யப் பிண்டத்தைப் பார்த்தீர்களா! நேற்று நான் கண்டகாட்சி என் வயிற்றைக் கிளறி சங்கடம் செய்துவிட்டதால் மனது தாளாது அழைத்துவந்துவிட்டேன். என்னவிருப்பினும் இந்த அம்மாளின் ஆதி நிலையை நாம் அறிந்தவர்களாகையால், அந்த கோரக் காட்சியைச் சகிக்க முடியாது நெஞ்சு குமுறியது. இந்த ஒரு ஆத்மாவை நாம் ரட்சிப்பதால் எத்தகைய குறையும் உண்டாகாது...என்று தோன்றியதால் நான் கூடஅழைத்துவந்துவிட்டேன். அதோடு அந்த நாசகாலிப் பெண்ணால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் மனது குழம்பி இப்படி ப்ரமை பிடித்திருக்கிறார்களேயன்றி விபரீதமான மூளைக்கோளாறு இல்லை என்பதை இவர்களுடன் பழகுவதில் அறிந்துகொண்டேன். நாம் ஏதாவது சரியான முறையில் அவர்களுக்கு வைத்தியம் செய்தால் நன்றாகத் தெளிந்துவிடும் என்று தோன்றுகிறது...

என்று முடிப்பதற்குள் கிருஷ்ணமூர்த்தி எழுந்துநின்று மரியாதைசெய்து "ஐயோ! என்னால் இந்த மகாலட்சுமியை இப்படிப் பார்க்கச் சகிக்கவில்லையே! அடாடா! காலக் கண்ணாடியில் இந்த உலகத்தை என் வயதிற்குள் எத்தனை விசித்திரங்களில் பார்த்தாகிவிட்டது... அம்மணீ! தாயே...என்னைத் தெரிகிறதா?"...என்றார். கண்களில் நீர் மடமடவென்று பெருகியது.

பங்கஜம் பேந்தப் பேந்த விழித்தவாறு "நித்தியானந்தத்தை நாடு"...என்று ஒரு அடியைத்தான் பாடி, பெரிதாக அழக்கிளம்பி விட்டாள். இதைக் கண்ட கிருஷ்ணமூர்த்தி 'பெற்ற வயிறுபிற்றே பாவம்!...ஆண்மகன் கெட்டலைவதையே சகிக்காது நம் வயிறு குமுறுகிறதே! பெண்மகளை இத்தகைய நிலையில் பார்க்கும்போது வயிறு துடிக்காதா?"...என்றார்.

ஸாரதா இடைமறித்து "இதென்ன பேச்சு! கற்பு...நீதி...நியாயம், தர்மம், கடமை...முதலிய சகலமும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரேமாதிரியில்தான் பகவான் வகுத்திருக்கிறானேயன்றி ஆண்களுக்கொரு நீதி, பெண்களுக்கொரு நீதி அவன் பிரிக்கவில்லை. ஆத்ம பலத்தில் ஆண்களைவிடப் பெண்களே சிறந்த வைராக்யம் படைத்தவர்கள் என்பதை எத்தனை உதாரணத்துடன் வேண்டுமாயினும் காட்டுவேன். சரீரபலத்தில் வேண்டுமானால் பெண்கள் சற்று குறைந்தவர்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். எந்த ஊழலையும் தெய்வத்திற்கும் பயப்படாது மனிதப் பிறவிக்கே ஒவ்வாத நிலையில் ஆண்கள் செய்துவிடுவதைப் பிறகு மூடி மறைத்து ஆண்கள் செய்வதில் பாதகமில்லை என்கிற ஒரு கவசத்தை வேறு ஸ்தாபித்துவிட்டதனால்தான் கண்ணுமண்ணு தெரியாது ஆண்கள் எந்த தூர்த்தச் செய்கைகளையும் செய்துகொண்டே கம்பீரமாக உலாவலாம்! ஒருவனே பத்துதாரம் விவாகம் செய்துகொள்ளலாம்!!...

கிருஷ்ணமூர்த்தி:—ஸாரதா! உன் ஆவேச வார்த்தைகளை நான் உணருகிறேன். நீ சொல்வது முற்றிலும் சரியானதேதான். ஆண்கள் மட்டும் கற்பை இழர்து மானங்கெட்டுத் திரிவதைப் பெருமையாக நினைக்கும் அல்பர்களைப்போல் நான் நினைக்கவில்லை. நான் சொல்லியது தவறுதான்; அதை நான் மாற்றிக்கொள்கிறேன். இந்த அம்மாளை முதலில் நன்றாக ஸ்நானம் செய்வித்துத் தலையைவாரி வேறு உடையை அணிவித்து வயிறார ஆகாரத்தைக் கொடு. பிறகு பேசலாம்...உம்...இவர்களுக்கு நன்றாகத் தெளிவதைவிட இப்படியே இருந்தால் வயிற்றெரிச்சல் தெரியாமலிருக்கும், பாவம்! இது விதிசெய்யும் விபரீதம்!...என்றார்.

ஸாரதாம்பாள் பங்கஜத்தை நன்றாக ஸ்நானம் செய்வித்து வயிறார ஆகாரத்தைத்தானே ஊட்டிப் பின் அவர்களை ஒரு இடத்தில் உட்காரவைத்து "அம்மணீ! இங்கேயே இருங்கள். இப்போது ஸுசீலா இங்கு வருவாள்; பார்க்கலாம்" என்று ஏதோ ஒருவித சமாதானம் செய்து தன் வேலைக்குச்சென்றாள்.

அந்த அறையில் மாட்டப்பட்டிருக்கும் பழயகாலத்தில் ஸுசீலாவும் உபாத்தியாயருமாக எடுத்த புகைப்படம் மாட்டப்பட்டிருந்ததை தற்செயலாகப் பார்த்தாள். அதற்குப் பக்கத்திலேயே தங்கள் குடும்பத்துப் புகைப்படமும் மாட்டியிருந்ததையும் ஒருங்கே பார்த்தவுடனே,ஏதோ மின்ஸார ஷாக்கடித்தவள்போல் ஒருதுள்ளு துள்ளி 'இதோ...இதோ...இதோ...என் கண்மணீ! ஸுசீலா...

சுசிலா!"...என்று கத்தினள். ஸாரதாம்பாள் இதைப் பார்த்ததும் உடனே உள்ளே மாட்டாமல் வைத்திருந்த புகைப்படங்களை அந்த அம்மாளின் கையில் கொடுத்து'இதைப்பாருங்கள்'என்று புத்திக்கு ஒருவிதமான பலாக்குக் காட்டிவிட்டுச் சென்றுள்.

ஒருபடத்திற்குப் பலபடங்களாகத் தன்முன்பு கிடப்பதைப் பார்த்த பங்கஜத்திற்கு ஒரே வியப்பும் சந்தோஷமும் உண்டாகி "இதோ ஸுசீலா! அதோ ஸுசீலா...இதோ ஒன்னு"...என்று குழந்தைகள் கூறுவதுபோல் கூறிக் கும்மாளமடித்து ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பார்த்துப் பேசவும் ஆரம்பித்தாள். அந்த செய்கையில் அவள் உள்ளம் ஒரு புது இன்பத்தைக் கண்டது.

24

அந்தக் கிழவி படுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் நன்றாகத் தூங்கிவிட்டதை அவளுடைய குறட்டை நன்றாக அறிவித்தது. "எத்தகைய பயங்கரமான பாதகத்திற்கும் பயப்படாது துணிந்த அதே மனுஷியா நான்" என்ற எண்ணம் எப்படியோ அவள் எண்ணத்தில் திரும்பத் திரும்ப தோன்றித் தோன்றி மறைந்தது. வெகுநேரம் நின்றிருந்தாள். நடுநிசியின் நிசப்தத்தின் நிலை ஸுசீலாவின் அறிவைத் தூண்டி "எத்தனை விதமான தண்டனைகள் உனக்கு பகவானளித்தபோதிலும் அவைகளை நீ சகித்துக்கொண்டு இந்த நிசப்தத்தின் மவுனத்தைக் கற்றுக்கொண்டு நட"..என்று தன் மனத்தையேதான் பார்த்து எச்சரித்தாள்.

நிற்கமாட்டாத கால்கள் துவண்டுபோனதால் அப்படியே முடக்கிக்கொண்டு படுத்தாள். நித்திரை என்பதே அருகில் அண்டவில்லை. ஏதேதோ எண்ணங்களினால் மனது ஒருநிலை கொள்ளாமல் சல்லடைபோட்டுச் சலித்துக்கொண்டிருந்தது.மகத்தானபாபத்தைச் செய்தவர்கள் எப்படி எல்லாம் எமலோகத்தில் தண்டிக்கப் படுகிறார்கள் என்பதை ஸாவித்ரியின் சரிதையை ஸினிமா எடுத்த போதுதான் எமலோக ஸீனில் தமாஷாகக் கண்டு வேடிக்கையாகவே எண்ணி இருந்த அதே காட்சிகள் இன்று கண்முன்பு காலக் கண்ணாடியில் தோன்றி அபாரமான பயமும், என்றும் கண்டிராத ஒரு உண்மையான அதிர்ச்சியும் உண்டாக்கின.

வெகுவெகு ஆனந்தமாகச் செய்த பாதகத்தை அனுபவிக்கப் பயந்தால் விடுமா!...என்ற ஒரு தைரியமும் மனத்தில் தானே உண்டாக்கிக்கொண்டாள். விடியற்காலையைக் குறிக்கும் புள்ளினங்கள் ப்ரம்மானந்தமாகப் பாடக்கிளம்பின. பால்குடிக்கும் ஆவலில் கன்றுக்குட்டிகள் கத்தவாரம்பித்தன. கன்றின் குரலைக் கேட்டதும் பசுக்கள் தாயன்பு நிறைந்த த்வனியில் எதிர்க்குரல் கொடுத்தன. பால்கறக்கும் பாத்திரங்கள் தேய்க்கும் ஓசை கேட்டது.

கிழக்குவெளுத்த வெளிச்சம் கூரையின்மூலம் கீழே பரவியது. தூங்கிக்கொண்டிருந்த கிழவி கண்விழித்து எழுந்து கடவுளை வணங்கிப் பின் முகத்தைக் கழுவி அழகான குங்குமப்பொட்டு இட்டுக்கொண்டு ஊஷிலாவிடம் வந்து அவளுடைய தலையைத் தானே கோதிச் சேர்த்து நடுத்தலையில் சன்யாசிகள் முடிப்பது போல் முடித்துவிட்டுப் பின் பல்துலக்கச்செய்து முகங்கழுவி பொட்டுவைத்துப் பிறகு சன்யாசினிகள் அணியும் காவி உடையைத் தானே உடுத்திக் காவித்துணியினால் தலையை ஒரு புதுவிதமாகக் கட்டிப் பின் முகத்திற்குக் காவிக் கலரிலான மெல்லிய துணியால் முகத்தை நன்றாகமூடி கண்கள் உள்ளபாகத்திற்குமட்டும் பெரிய த்வாரம் வைத்துப் பின்புறம் சேர்த்துக் கட்டிவிட்டாள்.

ஊஷிலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒன்றும் கேட்கவும் தோன்றவில்லை. பொம்மைபோல் நிற்கிறாள் எனினும், அடிக்கடி பெருமூச்சும் கண்ணீர் உதிர்வதும் அவளால் தடைசெய்ய முடியாது நின்றாள். கிழவியோ வாயே திறக்கவில்லை. மெஷின்போல் தன் காரியத்தைச் செய்தபிறகு அங்கு மாட்டப்பட்டிருந்த கண்ணாடிக்கு முன்பு இவளை அழைத்துச்சென்று நிறுத்தி அவளைப் பார்க்கும்படி சமிக்ஞையைச் செய்துவிட்டுத் தான் பேசாமல் நின்றாள்.

கண்ணாடியில் தன்னைத் தான் பார்த்துக்கொண்ட ஊஷிலாவின் சரீரமே கிடுகிடு என்று நடுங்கியது. எத்தனையோ தினுசுதினுசான மேக்கப்புகள் செய்துகொண்டு கண்ணாடியில் தன்னைத் தான் பார்த்துக்கொண்ட நினைவுகள் குபீரென்று வந்துவிட்டன. தன் உருவையே தனக்கு மறைத்துப் புனிதமான காவி உடையில் இப் பாவ ஜென்மத்தை மறைத்துக் காணும் காட்சியைக் கண்டவுடனே நெருப்புக்குள் ஸ்புடம்வைத்து அவுடதம் செய்வதுபோல் தன்னை நெருப்புக்குச் சமமான காவிஉடையில் அமுக்கி ஸ்புடம் வைத்திருப்பதாக ஒருபுதிய தோற்றம் தோன்றியது. அந்த தோற்றத்தின் உணர்ச்சி தேகம் பூராவும் பரவி மின்ஸாரம் தாக்குவதுபோல் ஒரு உணர்ச்சி உண்டாக்கியது.

அந்த வேகத்தின் காந்த சக்திபோல் கரங்கள் தானாகக் குவிந்தன. ப்ரமை பிடித்தவள்போன்று நின்றிருக்கையில் ஒரு காகிதத்தைக் கிழவி இவளிடம் கொடுத்தாள். ஆச்சரியத்துடன் அதை அச்சிறு வெளிசத்தில் படிக்கவாரம்பித்தாள்.

1. செப்புச் செம்பில் ஜலம் குடிப்பதால் பலவிதமான ஆரோக்யம் உண்டாகும். ஆனால், அந்த நல்ல ஆரோக்யம் உண்டாவதற்குச் செம்பின் உள் பாகத்தை வெகு நன்றாக புளிபோட்டுத் தேய்த்து சுத்தம் செய்யவேண்டும். அதைவிட்டு மேல் பாகத்தை மட்டும் சுத்தமாகப் பளபளவென்று தேய்த்துவிட்டு அப்படியே தண்ணீர் குடித்தால் தாம்பரத்தின் களிம்பு ஏறி உடனே பலவித ரோகங்களுக்கு இடமளித்துவிடும். அதுபோலத்தான் மனித வாழ்க்கையின் தூய்மையும் என்பதை அறிந்துகொள்ளு.

2. மக்களின் இதயம் ஒரு சொர்ண பாண்டம். அப் பாண்டத்தில் முதலில் அன்பு, தயை, பக்தி, பரிசுத்தம், கற்பு என்கிற பஞ்சாம்ருதத்தை நிரப்பிவைத்தால் அந்த அமுத பானத்தின் பலனாக மனிதப்பிறவி சீர்பெற்றுச் சிறப்புற்று வாழலாம். பாத்திரமறிந்து பண்டத்தை வைக்காமல், காமக்ரோத மத மாத்ஸர்யம் முதலிய விஷ பதார்த்தங்களை வைத்தால், விஷம் ஆளைக் கொல்வது நிச்சயம்.

3. பாவ புண்ணியங்களைப் பகுத்தறிவால் அறியும் சக்தியை பகவான் ஆறறிவு படைத்த மனித ஜென்மாவுக்குத்தான் கொடுத்திருக்கிறார். ஆனால், இத்தகைய உயர்ந்த ரகஸ்யத்தைக் கூட அறியாமல் மிருகம்போல் வாழ்க்கை நடத்தினால் பலபல ஜென்மங்களுக்கு மிருகங்களாகவே பிறந்துதான் பாபத்தைத் தீர்க்கவேண்டும்.

4. பகவானுடைய லீலாவினோதங்கள் அனந்தம். அவைகளை நாம் உள்ளது உள்ளபடி கண்டுகொள்வது அசாத்யம். ஆனால், அது எத்தகைய விசித்திரமானது என்பதை அறிந்துகொள்வதற்காகத்தான் பகவான் சில இயற்கைக் காட்சிகளையும் அபூர்வசக்திகளையும் வகுத்திருக்கிறார். எப்படி உலர்ந்த ஒரு சிறு விதையிலிருந்து பகவானின் அத்புத சக்தியால் பச்சை இலைகளுடன் செடிகள் முளைத்து, பச்சைச் செடியிலிருந்து வெள்ளையான தூய புஷ்பங்கள் பூத்து காய்கள் காய்த்து மஞ்சளாகப் பழம்பழுத்து அப்பழம் இனிக்கிறது! மறுபடியும் அப்பழத்தின் கொட்டையே வேறொரு செடியை உண்டாக்குகிறது. இந்த அபூர்வரகஸ்யத்தைச் சற்று ஆராய்ந்து மனக்கேணியில் தேக்கிக்கொண்டால், ஞானத்தாமரை புஷ்பித்து அறிவு பாஸ்கரனால் அத் தாமரைமலர்ந்து ஆத்மாலவக்கடைத்தேற்றும். மனிதனின் அறிவுதான் சிறு கொட்டை. அது இதயத்தில் ஊன்றியதும் பல கிளைகளுடனும் இலைகளுடனும் எண்ணங்கள் பலவிதமாக வளர்ந்து செழிக்கின்றன. எண்ணங்களில் எது நன்மை எது தீமை, எது நித்யம் எது அநித்யம் என்று தமக்குள்தான் போராடித் தெளிந்து முடிவாகும் எண்ணமே, செயலே தூய புஷ்பமாகும். அதன் பிறகு அதன் பலனை உண்டாகும் திடசித்தமும் உறுதியான செயலுமே பழமாகிறது. மஞ்சள் நிறந்தான் காவி உடையைக் காட்டுகிறது. நீ இன்று காவி உடையிலிருக்கும்போது இனியாவது அதற்குத் தகுதியான முறையில் நடந்துகொண்டு வழுவாமலிரு....

இதைப் படிக்கும்போது எதனாலோ தேம்பித் தேம்பி அழுகை வந்துவிட்டது. காவி உடையை மறுபடியும் ஒரு முறை பார்த்தாள். கடிதத்தைக் கிழவி வாங்கிவைத்தபின் கிழவி குடிசையினின்றும் இவளை சமிக்ஞையினாலேயே வெளியில் ஒரு பர்லாங்குதூரத்திற்கு மேல் அழைத்துச்சென்றாள். பதுமைபோல் பின்னால் நடந்துகொண்டே இருந்தாள். ஏராளமான குடிசைகள் காணப்பட்டன. ஒன்றுக்கொன்று தூரமாகவிருந்தது. ஒரு குடிசைக்குள் இவளைக் கிழவி அழைத்துச்சென்று சுற்றுமுற்றும் காட்டினாள்.

கயிற்றுக் கட்டில்களில் நோயாளிகள் படுத்திருந்தார்கள். வலியினால் 'அப்பா, அம்மா' என்று முனகிக்கொண்டிருந்தார்கள். சிலர் அவர்களுக்கு நர்ஸ்போல் சிகிச்சை செய்துகொண்டிருந்தனர். இந்த இடத்தைப் பார்த்தவுடனே ஆஸ்பத்ரியைப்போல் இங்கு நிர்மாணிக்கப்பட்ட விடுதி என்பதை ஸுசீலா வெகு எளிதில்

புரிந்துகொண்டாள். கிழவி இவளை அழைத்துச்சென்று ஒரு பலகையில் எழுதியுள்ள விஷயத்தைக் காட்டினாள். அதில்,

"காவி உடை முகமூடி ஸேவகிகள் நோயாளிகளின் ஜலமலங்களை அருகிலிருந்து அவ்வப்போது சுத்தம்செய்து அன்பாய் ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொண்டு கவனித்து இங்கேயே இருக்க வேண்டும். காலை 8 மணிக்கும், பகல் 12 மணிக்கும், மாலை 7 மணிக்கும் ஆகாரம் செய்வதற்குமட்டும் சென்று குளித்துச் சாப்பிட்ட உடனே வந்துவிடவேண்டும். இந்த நிபந்தனைகளை மீறுகிறவர்களை நேரில் ஸ்வாமிகளிடம் ஒப்படைக்கப்படும்"....

இதைப் படித்ததும் ஸுசீலாவைத் தூக்கிவாரிப்போட்டது. என்ன "ஆஸ்பத்ரிகளில் லச்சிகளைப்போல் வேலைசெய்யவேண்டுமா? ...என்று தனக்குள் ஒருக்ஷணம் எண்ணித் துள்ளினாள். கண்கள் இமைகூட அசையாமல் நின்றுவிட்டன. கால்முதல் தலைவரையில் வெந்நீர்போல் வெயர்வை வெள்ளம் குபீரென்று பொங்கி வழிந்தது.

25

பங்கஜத்தின் பரிதாபத்தைக் காணக்காண சாரதாம்பாளின் மனம் முற்றிலும் மாறிப்போய் அன்பும் அருளுமே அவள் இதயத்தில் சுரந்தது. பல படங்களைக் காட்டியதில் பங்கஜத்தின் உள்ளத்திலும் சிறிது சிறிதாக மாறுதல்களும் உணர்ச்சியும் உண்டாவதை அறிந்ததனால் தனக்குப் பிடிக்கவில்லை என்றாலும், பங்கஜத்தின் புத்தி தெளியும் பொருட்டாக,—எத்தனை ஸினிமாவில் ஸுசீலாவின் தனிப்பட்ட படங்கள் உண்டோ அத்தனையும் சேர்த்து ஒரே புத்தகம் போல் தைத்து அதைப் பங்கஜத்தினிடம் கொடுத்துத் திரும்பத் திரும்ப அதைப் பார்க்கவும் அதனுடன் பேசவும் அதையே ஓர் பொழுதுபோக்காகவும்கொண்டதால், அவளால் எந்தவிதமான தொல்லையும் உண்டாகவேயில்லை.

ஆனால், திடீர் திடீர் என்று "ஸினிமாவைக் கொளுத்திவிடலாமா?......ஸினிமா என்கிற பிசாசுதானே என் கண்மணியை இழுத்துக்கொண்டு போய்விட்டது; ஸாரதாம்பா!...நீ ஸினிமாவைப் பார்க்காதே. ஸினிமாவைக் கொலைசெய்துவிடு"....என்று மட்டும் சொல்லிப் பெரிதாக மூச்சுவிடுவாள். க்ருஷ்ணமூர்த்தி ஆனந்தமாகப் பாடும்போது தன்னையறியாது தானும் எதிரில்போய் உட்கார்ந்து அதைக் கேட்டுக் கண்ணீர்விடுவாள். ஒவ்வொரு சமயம் "வாத்யாரே! இந்தப் பாட்டை நீர் என் கண்மணிக்குச் சொல்லிக்கொடுத்தீரல்லவா" என்று திடீரென்று கேட்பாள்.

அப்போது அவள் குழப்பம் தெளிந்திருப்பதைக் காண கிருஷ்ணமூர்த்தியே ஆச்சரியப்பட்டு எந்தெந்த பாட்டுக்களை ஸுசீலாவுக்குத் தான் எப்படி சொல்லிக்கொடுத்தாரோ அதே பாட்டுக்களைத் தான்பாட ஆரம்பித்தார். நாளடைவில் இப்பாட்டுக்

களால் பங்கஜத்தின் குழப்பம் தெளிந்துவருவதைக்காண ஸார தாம்பாள் சந்தோஷப்பட்டாளேயன்றி கிருஷ்ணமூர்த்தி சந்தோஷப்படவில்லை.

ஒருநாள் கிருஷ்ணமூர்த்தி பாடுவதை பங்கஜம் கேட்கும் போது யாரோ நாலைந்துபேர்கள் அங்கு வந்து "ஸார்! ஸார்!" என்று கூப்பிட்டார்கள். வயது அதிகம் ஆய்விட்டதனாலும், மனக் கஷ்டத்தினாலும் மெலிந்துள்ள கிருஷ்ணமூர்த்தி வந்தவர்களைப் பார்த்ததும் யார் என்று புரியாமல் விழிப்பதற்குள், வந்தவர்களில் ஒருவன், பங்கஜம் இங்கு உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டுத் திடுக்கிட்டவனாய் மற்றவனிடம், "இதோபாரு! அன்று பயித்தியக் காரர்கள் கூட்டத்தில் வந்தவள் இதோ இங்கு உட்கார்ந்திருக் ராகளே! இவளுக்கும் இந்த கிழவனுக்கும் என்ன சம்பந்தம்!" என்று குசமசவென்று பேசினான். அவனும் அதையே ஆச்சரிய மாகப் பார்த்துப்பின் "உறக்கப் பேசாதே; நாம் இவளைப்பற்றித் தெரிந்ததாகவே நடந்துகொள்ளக்கூடாது" என்று காதுடன் ரகஸிய மாகக் கூறினான்.

இதற்குள் கூடவந்த மற்றொருவன் "ஸார், நமஸ்காரம்! எங்களைத் தெரிகிறதா?" என்று தானே ஆரம்பித்தான். கிருஷ்ணமூர்த்திக்கு எதுவும் புரியவில்லை. "வந்திருப்பவர்களைப் பார்த்தால் முற்றிலும் புதியவர்களாகவே காணப்படுகிறது. இவர்கள் எதற்காக என்னைத் தேடிக்கொண்டு வரவேண்டும்?" என்ற சந்தேகத்துடன் தானே எழுந்து இவர்களை வெளிப்பக்கம் அழைத்துக்கொண்டுபோய் "நீங்கள் யாரய்யா? யாரைத்தேடுகிறீகள்?" என்று மரியாதையாகக் கேட்டார்.

வந்தவர்:—"ஸார்! உங்களையேதான் தேடிக்கொண்டுவந்தோம். ஏதோ பழயகாலத்திய... என்று முடிப்பதற்குள், கிருஷ்ணமூர்த்தி சற்று ஆத்திரத்துடன் பேசத்தொடங்கி, "ஸார்! நீங்கள்யாராஇருந் தாலும் சரி, எனக்கு அவச்யமில்லை- நான் யாருடனும் பேசுவ தில்லை. எனக்கு எத்தகைய விவகாரங்களும் வேண்டாம். பழய, புதிய என்று இழுக்கும்போதே நீங்கள் கட்டாயம் ஸினிமாக் காரர்களாகத்தானிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. உங் களுக்கொரு நமஸ்காரம்; உங்கள் விஷயத்திற்கு ஒரு நமஸ்காரம்; போய்வரலாம்". என்றார்.

இம்மாதிரி இவர் சொல்லுவார் என்று வந்தவர்கள் எதிர் பார்க்காததால் சற்று திடுக்கிட்டு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சில வினாடிகள் நின்றார்கள். அதிலும் ஒருவன் சற்று தைரியத்துடன் பேசத்தொடங்கி 'சார்! நாங்கள் உங்களிடம் எந்த விஷயத்தைப் பற்றியும் உளவறியவரவில்லை. ஆதியில் நீங்கள் இருந்த கண்ணியத்திற்கு உங்கள் மூத்தமகனால் பங்கம் உண்டா கியது போதாமல் இன்னொரு ஆபத்தும் வராது தடுப்பதற்கு உங்க ளிடம் எச்சரிக்கை செய்வதற்காகவே வந்தேன். காலவிதியைக் கடந்து உங்கள் மகன் விடுதலையாகிவிட்டதாகத் தெரிகிறது.

விடுதலையாகி வந்தவன் பழி தீர்ப்பதற்காக ஒரு சதியாலோசனைக் கூட்டத்தைத் திரட்டி...

இதற்குமேல் கிருஷ்ணமூர்த்தியால் தாங்கமுடியவில்லை. வெகு கோபத்துடன் பேசத்தொடங்கி "ஸார்! நீங்கள்தான் அத்தகைய சதிகாரக்கூட்டம் என்று எனக்கு நன்ருகப் புரிந்துவிட்டது. மரியாதையாய் நீங்கள் போகப்போகிறீர்களா அல்லது அக்கம் பக்கத்தைத் திரட்டட்டுமா? சுந்தரன் என்கிற பாவிக்கும் எங்களுக்கும் இனி ஸ்நானப்ராப்திகூடக் கிடையாது. அவனைப்பற்றிய எந்த விதமான விஷயம் வந்தாலும் எங்களுக்குப் பாதகமில்லை. அவன் விடுதலையானாலும் ஒன்றுதான், ஆகாவிடினும் ஒன்றுதான்; இனி அவன்முகத்தில் விழிக்க நாங்கள் தயாராயில்லை. சதியாலோசனையில் சேர்ந்து தூக்குமேடை ஏறினாலும் எங்களுக்கதனால் எந்த விதமான துக்கமும் இல்லை. நீங்கள் போய்வாலாம். நாங்கள் பிள்ளையைப் பெற்றதும், இந்தப் பயித்தியக்காரி பெண்ணைப்பெற்றதும் ஒரே பலனில்தான் முடிவைக் கொடுத்துவிட்டது. எங்கள் வயிற்றெரிச்சலை ஒருவரும் கிளறவேண்டாம்."...

என்று கடுமையாகக் கூறியதைக்கேட்டதும் இதுவரையில் தெரியாத ஒரு ரகஸியத்தை எதிர்பாராத விதமாய்த் தெரிந்து கொண்டதில் அவர்கள் வியப்புற்ருர்கள். "ஆகா! அம்ஸாதேவியின் தாயாரா இந்த அம்மாள். இப்பொழுது விஷயம் நன்ருகப் புரிந்து விட்டது. இந்தப் பயித்தியக்காரியை அன்று நேரில் பார்த்ததனால் தான் அம்ஸாதேவியின் நிலைமையே மாறிவிட்டது. என்னவிருந்தாலும் பெற்ற தாயாரல்லவா! அந்த ஒரு தனித்த அன்பின் வேகத்திற்கு மட்டும் யாரால் அணைபோடமுடியும்? அதனால்தான் வெள்ளம் கட்டறுத்துக்கொண்டு கரைபுரண்டுவிட்டது. வள்ளி சொல்லியதன் உண்மையும் நடந்துள்ள சகலத்தையும் கோர்வைசெய்து பார்த்தால் விஷயம் ஸ்பஷ்டமாக விளங்கிவிட்டது" என்று அவர்கள் தமக்குள் தனித்தனியே ஆழ்ந்த யோசனையுடன் புரிந்துகொண்டார்கள். தங்களுக்குச் சற்றும் பிடிகொடுக்காது பேசிய கிருஷ்ணமூர்த்தி அவ்விடத்தைவிட்டும் போய்விட்டதால், மேலே என்ன செய்வது என்று சற்று தியங்கினுர்கள். சுந்தரத்தைப் பற்றிய தகவலை அறிவதற்காகவே வந்த இடத்தில் ஒன்றும் உபயோகமில்லாதுபோய்விட்டதால் பேசாமல் வந்தவழியோடு திரும்பிச் சென்ருர்கள்.

உள்ளே வந்த கிருஷ்ணமூர்த்தியின் உள்ளம் கொதிக்கிறது. சுவரில் மாட்டப்பட்டிருந்த காலெண்டரின் தேதியும் அதன் பக்கத்திலிருந்த சுந்தரத்தின் புகைப்படமும், ஒரே சமயத்தில் இவர் கண்ணில் பட்டதும் ஏற்கெனவே இருந்த ஆத்திரம் பின்னும் மூண்டு விட்டது. உடனே காலெண்டரையே தூக்கி எறிந்தார். "பாழும் மாதமும் தேதியும் என்னைக் குழப்புகிறது; இன்று சரியாக 10 வருஷ காலமா ஆய்விட்டது, அப் படுபாவி த்ரோகம்செய்து?"...என்று ஆத்திரத்துடன் நினைத்தபடியே சுந்தரத்தின் புகைப்படத்தை

எடுத்து வீசி எறிந்தார். "சண்டாளா"! ஒருதரம் செருப்படிபட்டும் இன்னமும் புத்திவராது சதியாலோசனைக் கூட்டத்தையா திரட்டுகிறாய்? இத்தகைய படுபாவியைப் பெற்றதற்காக எங்களைத் துண்டு துண்டாக வெட்டினாலும் பாதகமில்லை. தூராசாரப் பிண்டத்தின் படங்கூட இங்கு வேண்டாம்? அதைத்தான் ஏன் பார்க்கவேண்டும். 'பரிசுத்தமான இதயத்தில் ஒரு மாசு ஏன் படவேண்டும்?.' ...என்று ஆக்ரோஷத்துடன் கூறினார்.

வீசி எறிந்த படத்தின் கண்ணாடி சுக்கல்சுக்கலாகிச் சிதறியது. ஆனால், அட்டைப்படம் அப்படியே விழிப்பதுபோல் நிற்பதைப் பார்த்ததும் மனது பின்னும் துடிதுடித்தது. இதைப் பார்த்துக்கொண்டே வந்த சாரதாம்பாள் கண்ணீர் பெருக ஓடி வந்து அந்தப் படத்தை அப்படியே எடுத்துக்கொண்டு பதில் பேசாமல் போய்விட்டாள். இதைப் பார்த்த க்ருஷ்ணமூர்த்தியின் மனதே துடித்தது.

26

ஒரு க்ஷணநேரம் தம்பித்து அப்படியே தடுமாற்றத்துடன் நின்ற ஸுசீலாவுக்கு என்ன செய்வதென்றே தெரியாது தத்தளித்தாள். தன்னையும் தான்நிற்கும் இடத்தையும் தனது தொழிலையும் தன் தொழில் சாமான்களையும் ஒருதரம் சுற்றிப்பார்த்தாள்.

அதேக்ஷணத்தில், தான் எந்தெந்த அடாத விஷயங்களையும் தகாத செய்கைகளையும் ப்ரம்மானந்தம் என்று எண்ணிச் செய்தாளோ, அவைகள் அத்தனையும் பாபக் குவியலாக மலைமலையாக பயங்கரத்துடன் காலக் கண்ணாடியில் கண்டு திடுக்கிட்டாள். தான் வெகுவெகு இன்பம் என்று எண்ணியது எப்படி பாபப்பிண்டமாக ஆயிற்றோ, அதேபோல் தனக்கு இளப்பம், சங்கடம் என்று நினைக்கும் காரியம் புண்ணியகரமானது. அந்த பாபத்தைப் போக்குவதற்கு இதைவிடச் சிறந்த சத்மார்க்கம் வேறுஇல்லை. மனிதர்களின் சரீரத்தைப் போஷிக்கவும் ஆரோக்யத்தை உண்டாக்கவும் அசுத்தத்தை வெளிக் கிளப்பி நிம்மதியைக் கொடுப்பதும் இந்த மலஜலத்தின் விசேஷகுணமாகையால், அதையே கொண்டு நீ தேத்தரவுகொள்ளவேண்டும்.

பாபகரமான சகல பாதகத்தையும் போக்கிக் கூடுமானவரையில் இதயத்திலுள்ள அசுத்தத்தைப் போக்கித் தூய்மையைக் கொடுத்து உன்னை நல்வழிப்படச் செய்யும் புனிதத் தொழில் இதுதான்; தியங்காதே; ஒருவித பாபத்தையும் கனவில்கூட நினைக்காத புண்யமூர்த்தியான......த்யாகப் பதுமையான மகாத்மா காந்தியடிகள் இன்று ப்ரத்யட்சமாகக் கண்ணெதிரில் இதே தொழிலை மனப்பூர்த்தியான த்ருப்தியுடன் செய்துகாட்டுவதை அந்த மகானின் புண்ய சரிதையைப் படித்துத் தெரிந்துகொள்ளு. விஷத்தை நீக்குவதற்கு விஷத்தைக் கொடுப்பதும் ஒருவகைச் சிகிச்சையாகும். அதுபோலத்தான் உனக்கமைந்திருக்கிறது...என்று அக்கூரையின் ஒவ்

வொரு அசைவும் பலமான குரலெடுத்துக் கூறுவதுபோன்ற ஒருபயங்கரமான தோற்றமும், தனது ஆதி நிலையையும் இப்போதுள்ள நிலைமையையும் காலக்கண்ணாடியில் தெரிவதுபோன்ற தோற்றமும் ஒன்றுகூடி அவளை கதிகலங்கச் செய்துவிட்டன.

எந்த விஷயத்தைப் பார்த்தாலும் தன்னுடைய படத் தொழிலின் அனுபவமே தனக்கு ப்ரத்யட்சமாக வருவதால் அதை நினைத்து வியப்புற்றாள். நர்ஸ் என்கிற படத்தில்தான் நர்ஸ்வேஷம் தாங்கி குழந்தைகள் விளையாடுவதுபோல் தான் பெயரளவில் தொழில்செய்து, அதன் மூலம் ப்ரமாதமாய்த் தனது நடிப்பின் முழுத்திறமையையும் காட்டி நடித்துப் புகழ்பெற்ற பெருமையின் உண்மையை இப்போதுதான் சரியாக உணரமுடிந்தது. இதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருப்பதில் தன்னையேதான் மறந்தாள். பார்ப்பவர்களுக்கு இவள் இத்தொழில் செய்வதற்குப் பிடிக்காமல் இப்படி நிற்பதாயும் இவளுடைய வார்த்தைகள் பூராவும் வெறும் வெளிவேஷம் என்றும் தோன்றும்படியிருந்தது.

கூடவந்த கிழவி இவளைப்பார்த்துகடகடவென்று ஒரு சிரிப்புச் சிரித்தாள். அந்த ஓசையைக் கேட்டபிறகுதான் ஸுசீலா இவ்வுலகத்தின் உணர்ச்சியை அடைந்து திடுக்கிட்டுப் பின் "தாயே! மன்னிக்கவேண்டும். நான் ஏதோ இத்தொழில் செய்வதற்குப் பின்னடைவதாயோ அஸங்கியப்படுவதாயோ தாங்கள் நினைக்கக்கூடாது. நான் இத்தொழிலைப் பரம ப்ரீதியுடன் பரிபூர்ண இதயத்துடன் ஸத்யமாகச் செய்ய முன்வந்திருக்கிறேன். ஸ்வாமிஜியும் தாங்களும் எப்படி எப்படி எல்லாம் உத்திரவிடுகிறீர்களோ அப்படியே நான் நடக்க த்ரிகரணசுத்தியுடன் காத்திருக்கிறேன்" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினாள்.

அடுத்தக்ஷணமே அந்தக் கிழவி அங்கு மற்றொருபுறம் மாட்டப் பட்டிருந்த பெரிய அட்டையைக் காட்டி அதிலுள்ள வாக்யங்களைப் படிக்கும்படியாக உத்திரவிட்டாள். உடனே அதைப் படிக்க ஆரம்பித்தாள்.

1—இதிகாஸங்களையோ, புராணங்களையோ, மற்ற இதர ச்ரேஷ்டமான நூல்களையோ படிப்பதனால் வெறும் அறிவுமட்டும் வ்ருத்தியானால் போதாது. அதன் உள்ளார்ந்த ஸாரமறிந்து அதைக் கடைப்பிடித்துப் பயன்பெறுவதுதான் படித்தலின் உண்மையான பலனை அடைந்ததாகும். இதற்கு ஸ்ரீராமாயணத்தின் முக்ய கதாநாயகியாகிய ஸ்ரீஜானகிப் பிராட்டியையே உதாரணமாகக் கொள்ளவேண்டும்.

2—முதல்முதல் நாம் கற்கவேண்டியது பொறுமை; அந்த பொறுமையை முதலில் க்ரகித்தோமேயானால், சகல காரியங்களிலும் பெருமை யடையலாம். இதை முன்னிட்டுத்தான் பொறுத்தார் பூமியாள்வார் என்கிற பழமொழி பிறந்தது. அதை உத்தாரணம்செய்வதற்குத்தான் அரிச்சந்திரன், த்ருவன்,

ப்ரகலாதன் முதலிய புனிதமானவர்களின் சரிதைகள் தோன்றின.

3—ஸீதை பலவிதத்திலும் பொறுமையை வகித்துக்காட்டியதால் தான் இன்று உலகமே அந்தச் சிறந்த பாலத்தின்மீது தைரியமாக நடக்கத் துணிந்திருக்கிறது. காகாஸுரன்விஷயமென்ன, அக்னி ப்ரவேசத்தின் அத்புதச் சிறப்பென்ன, லோகாபவாதத்தின் பயனால் கர்ப்பிணியான அன்னை வனம்சென்ற ஆச்சரியமென்ன, பிறகும் தன் மக்களுக்குத் தனது பொறுமையையே காட்டித் தந்தையிடம் அவர்களைச் சேர்த்த நிகரற்ற செய்கையின் மகிமை என்ன?..இவைகளை நாம் முக்யமாய் அதிலும் இத்தகைய நல்தொழிலைச் செய்யும்போது சதா நினைத்து நினைத்து இதயத்தைப் பண்படுத்தப் பொறுமை என்கிற விதையை விதைத்து, அதற்கு நம்பிக்கை என்கிற எருவிட்டு, கடமை என்கிற நீரை வார்த்து, த்யாகம் என்கிற வேலியைக் கட்டிப் பயிராக்கிவிட்டால், அது வீண்போகாமல் கட்டாயம் உத்க்ருஷ்டமான பலனைக் கொடுத்து உலகம் வியக்கச் செய்துவிடும்.

4—ஆணுக்காகட்டும் பெண்ணுக்காகட்டும் பிறர் நலன் கருதிப் பணிபுரிவது பிறவிக்குணமாயும் பிறப்புரிமையாயும் கொள்ள வேண்டும். இவ்வகையிலும் ஸ்ரீராமாயணத்தில் ஸ்ரீராமன் காட்டிய பரோபகாரச் செய்கையைவிட ஸ்ரீ ஸீதாபிராட்டி காட்டிய பரோபகாரச் செய்கையே போற்றற்குரியதாகும். க்ஷீராப்தியில் ஸ்ரீபகவானிடம் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்து தம்மை ரக்ஷிக்கும்படி தேவர்கள் முறையிட்டதால் ஸ்ரீராமாவதாரம் எடுத்துக் காப்பாற்றுவதற்குத் தான்வாக்களித்தபடி தனது கடமையை ராமன் செய்தார். ஸீதையோ ஆயிரக் கணக்கான தேவமாதர்களை அஸுரர்கள் சிறைபிடித்திருந்ததைக் கண்டு மனம் சகியாது தன்னினத்தைச் சார்ந்த பெண்மணிகளின் சிறையை விடுவித்து ரக்ஷிப்பதற்காகத் தானே வலுவில் ஸ்ரீராமனுடன் கானகம் சேர்ந்து மாயமானைத் தான் வேண்டுவதுபோல் ஆசித்து, அதையே முகாந்திரமாகக்கொண்டு தானும் சிறைபுகுந்து தான் தனது சேவையைப் புரிய முன்வந்து அவர்களுடைய துன்ப மகற்றித் தானும் இன்பமடைந்த மகாச்ரேஷ்டமான ரகஸ்யார்த்தத்தைத்தான் முதலில் பெண்களாகியவர்கள் கவனிக்கவேண்டும். சீதை சிறைபுகுந்த சிறப்பையே ஸ்ரீராமாயணம் கூறுகிறது என்கிறார் கம்பநாட்டாழ்வார்...என்கிற வரையில் படிப்பதற்குள் ஸுசீலாவின் இதயம் வெடித்துவிடும்படியான துக்கம் பீறிக்கொண்டுவந்துவிட்டது.

தேவமாதரை மீட்பதற்காகவா ஸீதை வலியச் சிறை புகுந்தாள்? தன்னினத்தைக் காப்பாற்றிப் பெரும்புகழுடையவா ஸீதை வனம் சென்றாள்!

ஐயோ! பெண்ணினத்திற்கே என்றும் அழியாத வடுவை உண்டாக்கி 'சீ! சீ! என்று காரி உமிழ்ந்து, கைகொட்டிச் சிரிக்கும் படியாகவன்றோ நான் இருக்கிறேன்'. நான் பெண்ணு?...நானு ஒரு பொறுமையே வடிவெடுத்த பெண்ணுருவம்?...இல்லை... இல்லை, நான் ராக்ஷஸி...நான் குடிகெடுக்கும் கோடரிக்காம்பு' என்று தன்னையே தான் நொந்துகொண்டும் வெறுத்தும் சில வினாடிகள் நின்றாள்.

இதற்குள் ஒரு நோயாளி "மாதாஜீ!"...என்று ஈனஸ்வரத்தில் கூப்பிட்டாள். கிழவி ஸுசீலாவைப் பார்த்து பெட்பேனையும் தகரக்குவளையையும் காட்டி எடுத்துக்கொள்ளும்படி சமிக்ஞை செய்தாள். உடனே மறுபேச்சின்றி வெகு சுறுசுறுப்பாக அவை களைக் கையில் எடுத்துக்கொண்டு கிழவியுடன்கூடச் சென்றாள்.

அதிகம் கூறுவானேன்? ஸுசீலாவின் அன்பும் ஆதரவும் இனியவசனமும் கனிந்து பரிந்து செய்யும் ஆற்றலும் நோயாளி களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டன. ஆச்ரமத்திலிருப் பவர்களுக்கே நோய் வந்தால் அவர்களை இம்மாதிரிவைத்து ஆதரிப் பதே ஆச்ரமத்து வழக்கம். இதுபரியந்தம் சிலசமயங்களில் இந்த வேலை செய்பவர்கள் முகத்தைச் சற்று சுளித்தாலும் சுளிப் பார்கள். ஸுசீலாவிடம் முகத்தைச் சுளிப்பதென்பதே காணுது சதா அன்பும் கனிவும் தாண்டவமாடுவதைப் பார்த்த நோயாளி களின் உள்ளம் வியப்புற்றது.

அன்று இங்கு இவளைக் கொண்டுவிட்டபிறகு ஸ்வாமிஜியைப் பற்றி இவளுக்கு ஒன்றுமே தெரியாது. ஆனுல், இவளைக் கொண்டு விட்ட கிழவிமட்டும் வந்து பார்த்துவிட்டுப்போவாள். கிழவியின் செய்கை சுசீலாவுக்கு ஒரு புதுமையாகவே இருந்தது. மகான்கள், யோகிகள், ரிஷிகள் முதலியோர்கள் மவுனமாக வ்ருதமிருந்ததாயும் சமாதிநிலையை அடைந்ததாயும் கூறக் கேட்டதுண்டு. இந்தப் பெண் மணியும் அப்படி மவுன வ்ருதமிருக்கிருளா அல்லது ஏதாவது வ்யாதி யினுல் வாய் அடைத்துவிட்டதா—ஒன்றுமே புரியவில்லையே; தப்பித் தவறிக்கூட ஒரு வார்த்தை சொல்லாதிருப்பது வியப்பிலும் வியப் பாகவன்றோ இருக்கிறது. ஊமை என்றும் சொல்வதற்கில்லை, ஊமையாயிருந்தால் காது கேட்காது. எதற்காக இப்படி இருக் கிருர்கள் என்று தெரியவில்லையே! இதை யாரைக்கேட்டால் தெரி யும்?...என்று தனக்குள் தானே யோசனை செய்வாளே யன்றித் துணிந்துகேட்க மனம் வரவில்லை. தைரியம் போதாமல் தவித்தாள். எக்காரணத்தினுலோ அதை மட்டும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை பலமாக உண்டாகியது.

தன்னுடைய தொழிலின் நிமித்தம் என்றுமில்லாத மனச்சாந்தி யும் இன்னதென்று அறியக்கூடாத ஒரு புதிய உணர்ச்சியும் மனத் தில் ஊற்றுப்போல் சுரந்து தனித்த இன்பத்தை யளித்தது.

பெத்தமனம் பித்து பிள்ளைமனங் கல்லு என்கிற பழமொழிப் படிக்கு ஸாரதாம்பாள் தன் மகனுடைய புகைப்படத்தைப் பார்க்க வயிற்றில் கூறத்திறமற்ற சங்கடம் செய்து கண்ணீரை ஆறுய்ப் பெருகச்செய்தது. இதே மகனை கர்ப்பமாயிருந்த நாள்முதல் பட்ட கஷ்டங்களும் இந்த மகன் பிறப்பதற்கு தான் எமலோகம் சென்று திரும்பிய பரிபவமும் அத்தகைய ப்ராணவஸ்தைப்பட்டாலும் ஆண் சிங்கம் பிறந்துவிட்டதால் அதன் எதிர்காலத்தை கால்க்கண்ணுடி யால் கண்டு ஏதேதோ மனக்கோட்டை கட்டியதும் அவனை எப் பாடு பட்டாவது சிறப்பாகப் படிக்கவைத்துச் சிறந்த உத்யோகத் தைச் செய்துவைத்து, மகிழவேண்டும்...நல்ல இடத்தில் சரியான ரூபவதியைக் கல்யாணம் செய்விக்கவேண்டும். காலாகாலத்தில் நிறைய குழந்தைகள் பிறந்து குடும்பம் கிளைகிளையாக வ்ருத்தியாக வேண்டும். பேரனையும், பேத்தியையும் வைத்துக்கொண்டு குலாவி அளவில்லாத பேரின்பத்தை அடையவேண்டும்...என்றெல்லாம் எண்ணிஎண்ணிப் பூரித்ததெல்லாம் பகற்கனவாகிவிட்டதால் இத் தனை எண்ணங்களின் குமுறலும் ஒன்றுகூடிக் குபீரென்று பிச்சிக் கொண்டு துக்கமாக வந்துவிட்டது.

தேம்பித்தேம்பி அழுவதைக் கவனித்த கிருஷ்ணமூர்த்தியும் வருத்தத்துடன் "சாரதா! இதென்ன அஜ்ஞானம்? நீ அதிகம் படித்த படிப்பாளியில்லை எனினும் இயற்கையாகவே நல்ல விவேக மும், ஆழ்ந்த கருத்தும், உறுதியான மனமும் உடையவளாயிற்றே அத்தகைய நீயா கண் கலங்குவது? அயோக்ய ராஸ்கல் பெற்றவர் களின் வயிறெரியச் செய்துவிட்டுக் குலத்திற்கே சர்வ நாசத்தையும் அவமானத்தையும் உண்டாக்கிச்சென்ற அந்தப் படுபாவியைப் பற்றி நீ ஏன் அழவேண்டும்?...

என்று முடிப்பதற்குள் சாரதாம்பாள் மிக்க விசனத்துடன் புலம்பியவாறு..."ஸ்வாமீ! என்னவிருப்பினும் ஆண்களைவிடப் பெண்களுக்கு பாசமும் அஜ்ஞானமும் அதிகம், பச்சாத்தாபமும் அதிகம்; அம்மாதிரி இருந்ததனுல்தான் தனக்கு மகத்தான அபசா ரத்தை விளைவித்த காகாஸுரனை லோகமாதாவாகிய ஸீதாபிராட்டி அபயமளித்து ரக்ஷித்து உலகையே ப்ரமிக்கச்செய்தாள். அத்தகைய பெண்ணினத்தில் பிறந்திருப்பதனுல்தான் என்மனமும் தவிக்கிறது. போனதெல்லாம் போகட்டும். அந்தப் படுபாவி மகன் திரும்பி விடுதலையானுன் என்று இப்போது அவர்கள் கூறக்கேட்டதும் மனம் பறக்கிறது. இன்னும் ஒரு ஆசை அவனைத்தேடிப்பிடித்து நல்லபுத்திமதிகள் சொல்லித் திருத்தினுல் சற்று திருந்தலாம் என்று தோன்றுகிறது. இம்முறைமட்டும் சற்று தயவுசெய்யுங்களேன், மறு படியும் அவன் தீயவழியில் போகாது இந்த அவமானத்தினுல் கட்டாயம் மனம் மாறக்கூடும் என்று ஏதோ ஒன்று என் மனத்தில் சொல்கிறது...

என்று கூறுவதற்குள் கிருஷ்ணமூர்த்திக்குக் கோபமே வந்து விட்டது "சாரதா! இந்த வார்த்தை எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை.

பெற்றவர்களை மோசம்செய்துவிட்டு ஓடியதைக்கூட மறந்துவிடலாம். இன்னொருகுடும்பத்தை நாசம் செய்து ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பரிபவப்படுத்தியதோடு கொலைகாரன், திருடன் என்ற பெயருடன் சிறைவாசமும் செய்துவிட்டு வரும் அயோக்யப் பயலை வீட்டில் மறுபடியும் சேர்ப்பதா? இது நம்மைமட்டுமன்றி நம்மைச் சுற்றியுள்ள பந்துமித்ரர்களையும் நமது மற்ற குழந்தைகளின் வாழ்க்கைகளையும் அடியோடு பாழாக்கிவிடும் என்பதை மறந்து பேசுகிறாயா? நமது மூத்தபெண் மீனாக்ஷிக்கு வரிசையாக மூன்று பெண் குழந்தை பிறந்தாயிற்று. அவள் சகோதரன் கதி இப்படி என்றால் அந்தப்பெண்ணின் மதிப்புக்குறைந்து பரிகஸிக்க இடமும் சம்மந்தம் செய்ய இளப்பமும் உண்டாகுமேயன்றி மதிப்பு ஏற்படாது. அந்த மகன் பிறக்கவேஇல்லை என்று எண்ணிவிடு. உன் ஒருத்தியின் அல்ப ஆசையினால் குலத்துக்கே நாசம் விளைவிப்பது தர்மமில்லை. நம்மால் பிறருக்கு உபகாரம் இல்லாவிடினும் உபத்திரவமாவது இல்லாதிருக்கவேண்டுமல்லவா? இந்த ஒரு சண்டாளனின் ஆசைக்காக மற்றவர்களுக்கு இழிவோ கஷ்டமோ உண்டாக்க நான் ப்ரியப்படமாட்டேன். நீயும் இது விஷயத்தில் கோவிந்தசாமியையும் பங்கஜத்தையும் பார்த்துக் கற்றுக்கொள்ளவேண்டும். எத்தகைய சிறந்த த்யாகத்தை அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நினைக்க எனக்கு வியப்பாக இருக்கிறது. இந்த ஆசையை விட்டொழித்துவிடு" என்று ஆத்திரத்துடன் கூறினார்.

அதற்குமேல் அவள் பதில் பேசமுடியாது புலம்பியபடியே போய்விட்டாள். இங்கு நடந்த சகலத்தையும் பார்த்துக்கொண்டிருக்கும் பங்கஜத்திற்கு உள்ளுணர்வில் ஏதோ சிறிது புரிகிறது. ஆனால், பதில் சொல்லத் தெரியவில்லை. உணர்ச்சி மட்டும் பாதிப்பதால் கண்களில் நீர் பெருகிக்கொண்டே இருந்தது. தானாக எழுந்து சென்று சாரதாம்பாளைத் தடவியும் கட்டியணைத்தும் சமாதானம் செய்தும் "அழாதேம்மா... அழாதே"......என்று சொல்லும்போது கிருஷ்ணமூர்த்தியின் மனதிலும் ஏதோ சங்கடம் செய்தது.

குழம்பிப்போய்க் கிடக்கும் குடும்பத்தில் அமைதி என்பதை எப்படிக் காணமுடியும்? சாரதாம்பாளின் மனம் சற்று சாந்தியடையும்பொருட்டு எங்காவது வெளியூருக்குப்போய்வரலாமா என்று யோசனை செய்தார். ஆனால், அதற்கு சாரதாம்பாள் இசையாமையினால் அதுவும் நின்றுவிட்டது. உரியடி உத்ஸவத்தில் சருக்கு மரம் ஏறுகிறவன் ஒருகட்டு ஏறுவதற்குள் ஒன்பது கட்டு சருக்குவதுபோல், சாரதாம்பாளின் மனம் ஒரு அணு வைராக்யக் கொடியைத்தாவி ஏறுவதற்குள் ஒன்பதடி அஜ்ஞானத்தில் சருக்கிவிழுந்துவிடுவதால் மனத்திற்குத் தெளிவு என்பதே காணாதபோய்விட்டது.

எது எப்படி இருப்பினும் அவ்வூரிலுள்ள சந்திரசேகரரின் ஆலயத்திற்கு தினந்தோறும் போவதுமட்டுந் தவறுவதே இல்லை. பங்கஜமும் வந்த பிறகு அவளையும் இழுத்துக்கொண்டுபோய் ப்ர

தக்ஷிண நமஸ்காரம்செய்யாமல் வந்ததில்லை. என்று தன்மகன் ஓடிவிட்டானோ அன்று முதல் அவள்மனது அவ்வூரிலிருக்கப் பிடிக்காது இந்த சந்திர புரிக்குவந்து குடித்தனம் நிலைத்துவிட்ட பிறகு ப்ரதிதினமும் கோயில்க்குப்போவது ஒருபெரிய ஆறுதலாக இருந்தால் அதைமட்டும் விடாததுசெய்துவந்தாள்.

அன்று மாலை பங்கஜத்துடன் கோயிலுக்குச் சென்றாள். கோயில்வாசற்கதவு சாத்தப்பட்டிருந்தது. கோபுர வாசலில் கூட்டம் நிரம்பி பெரிய இரைச்சலாக இருந்தது. விவரம் தெரியாது அனேகர் விழித்தார்கள். சாரதாம்பாளும் விஷயம் புரியாமல் என்ன சண்டையாக இருக்கும் என்று கும்பலில் விசாரித்தாள்.

அன்று காலை சுமார் 7, 8, பரதேசிச் சாமியார்கள் கோபுர வாசலில் வந்து பிச்சைக்காரர்களுடன் உட்கார்ந்து பிச்சை எடுத்தார்களாம். அவர்களையப்போது யாருமே கவனிக்கவில்லை. அவர்களில் சிலர் அன்று வெள்ளிக்கிழமை உத்ஸவம் ஸேவிக்கவந்த சிலருடைய நகைகளைக் களவாடிவிட்டார்களாம். அதோடு கோயில் ஸ்வாமி ஸன்னிதியிலும் புகுந்து சில ஆபரணங்களைக் களவாடியதைப் பார்த்து ஒரே கூக்குரல் கிளம்பியதாம். சில சாமியார்கள் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டார்களாம். சிலர் மட்டும் அகப்பட்டுக்கொண்டார்களாம். பிறகு நன்றாக விசாரித்ததில் பலமான குற்றம் செய்து சிறையில் கடுங்காவல் தண்டனை யடைந்து விடுதலையாகிய சில கைதிகள் இம்மாதிரி வேஷம்போட்டுக்கொண்டு வந்து, பலமான வேலைசெய்திருப்பதாயும், அவர்களிலும் சிலர் பக்காத் திருடர்கள் என்றும் பிறகு தெரியவந்ததாம். அதனால் உடனே கோயிலில் பலத்த கலவரமும் போலீஸார் சோதனையும் நடக்கிறதால் கதவு சாத்தப்பட்டிருக்கிறது என்றும், நாசமாய்ப் போன பாவிகள் கோயிலிலேயே திருடவேண்டுமென்று எப்படி மனம் துணிந்ததோ அவர்கள் கையை ஒடிக்க, அவர்களைப் பாம்பு கடிக்க......என்றெல்லாம் பொது மக்களுக்குத் தோன்றியவாறு திட்டினார்கள்.

இந்த விஷயத்தைக்கேட்ட சாரதாம்பாளின் வயிற்றில் பகீரென்றது. சிறையிலிருந்து விடுதலையான தன் மகன் சதிகாரக் கூட்டத்துடன் சேர்ந்திருப்பதாக இன்று காலையில் கேள்விப்பட்ட ரணம் மனதை விட்டு மாறுவதற்குள் இதேஊரில் இத்தகைய பேரிடி போன்ற விஷயம் கேட்டதும் இந்தக் கூட்டத்தில்தான் ஒருவேளை தன் மகன் கலந்திருப்பானோ! என்று தோன்றிய உடனே ஆகாசமும் பூமியும் ஒன்றாகத் தலைசுற்றுவது போல் தோன்றி பலமான சங்கடத்தை உண்டாக்கியதும் பாஷாணித்தது போல் நின்றுவிட்டாள். அவள் கண்களில் நீர் அருவிபோல் பெருகியது.

183149
600 005

மகாத்மாஜி ஸேவா சங்கம்.

சங்கத்தின் ஆண்டுவிழாவுக்குப் பிறகு ஸ்ரீராமநவமி மகோத்ஸவத்தை 10 நாளும் செய்து கடைசி தினம் படாடோபமற்றுப் பணிபுரியும் சகோதரி ஸ்ரீமதி வசுமதி ராமஸ்வாமி தலைமையில் விழா சிறப்பாக நடந்தேறியது. காயனபடு கீர்த்தனபடு C. ஸரஸ்வதிபாய் அம்ருதவர்ஷம்போல் ராமதாஸ் சரிதையுடன் தனது ப்ரஸங்கத்தைச் செய்துமுடித்தார்.

சித்திரை வருஷப்பிறப்பன்று சங்கத்தின் அங்கத்தினரால் அகில இந்திய ரேடியோ நிலையத்தில் கதம்பநிகழ்ச்சி பலே ஜோராக நடந்தது. அன்று மாலை வஸந்த பங்களாவில் சங்கத்தின் உபதலைவி ஸ்ரீமதி வேதம்மாளின் தலைமையில் அதிஅத்புதமான விளையாட்டுப்போட்டிகள் தடபுடலாக நடந்து பரிசுகளும் வழங்கப்பட்டன.

இதற்கிடையில் ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு வெங்கடாசாரிய ஸ்வாமியால் ராமாயணத்தில் சரணாகதி சாஸ்த்ரம்பற்றி உபன்யாஸம் நடந்தது.

ப்ரதி வெள்ளிக்கிழமை பஜனை வழக்கம்போல் நடைபெறுகிறதோடு இப்போது ஒருமாத காலமாய் "சிறிய திருமடல்" என்ற சிறந்த ப்ரபந்தத்தின் அருமையான விஷயம்பற்றி ஸ்ரீமான் திருவாலி பண்டித ராமானுஜாசாரிய ஸ்வாமியால் உபன்யாஸம் நடந்துவருகிறது. இதற்கு ஆடவர்களும் வரலாம் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.

ஏப்ரல் மாதம் 22-ந் தேதி வெள்ளிக்கிழமை முதியோர் கல்விக் கழகத்தை ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள் திறந்துவைத்து அத்புதமாய்ப் பேசினார்கள். அந்த வகுப்பில் சுமார் 10 பேர்கள் படிக்கவந்திருக்கிறார்கள். அவ்வகுப்பை ஸ்ரீமதி C. ஸரஸ்வதியம்மாள் (திருக்குறள் வகுப்பு உபாத்தியாயினி) அன்புடன் நடத்த முன்வந்து அருமையான ப்ரஸங்கம் செய்து வகுப்பைத் துவக்கினார்.

ஏராளமானவர்கள் வந்திருந்தார்கள். சங்கத்தில் படிப்பவர்களுக்கு பலகைகள் புத்தகங்கள் நோட்டுப்புத்தகங்கள் பலபம் சாக்கு முதலிய சகலத்தையும் நமது பொக்கிஷதாரியான ஸ்ரீமதி கண்ணம்மாள் ராஜகோபாலன் அவர்கள் அன்புடன் வாங்கியளித்து மகோபகாரம் செய்தது குறிப்பிடத்தக்கது.

காந்தி கீர்த்தனம் — கதா காலக்ஷேபம் கவியோகி பாரதியார் எழுதியிருக்கிறார். ஸேவாசங்கத்து இலவசச் சம்பள நிதிக்காக ஏராளமான பணச் செலவில் மோகினி காரியாலயத்தார் இதை வெளியிட்டிருக்கிறார்கள். இதை வாங்கினால் இலவசச் சம்பளநிதிக்கும் உதவி செய்ததாகும்: மகாத்மாவின் சரித்திரம் பூராவும் நாம் படித்துப்பயனடைந்ததாகும். நமது புத்தகசாலையில் இது ஒரு மாணிக்கம்போல் ரக்ஷாமந்திரம் போல் ப்ரகாசிக்கும். ஆகையால் சிநேகிதைகளுக்கும் சிபார்சு செய்து இதைப்பரப்பி சங்கத்திற்கு உதவியளிக்கவேண்டும். எந்த தானத்திலும் சிறந்த தானம் கல்வி தானந்தான்.

27உ சென்னைரேடியோவில் நமது சங்க மாணவிகள் இரு தியாகராஜகீர்த்தனைகளையும், வை. மு. கோ. கீர்த்தனை ஒன்றையும் வெகு அழகாகப் பாடி ரஸிகர்களின் நன்மதிப்பைப் பெற்றார்கள்.

29உ பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களிடம் மகாத்மாஜி தேசிய ஞாபகார்த்த நிதிக்கு ரூ. 101—12—0 சங்க அங்கத்தினரின் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டது.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26. Car St., Triplicane, Madras. 5.

Managing Editor: V. M. SRINIVASAN, M. A., B. L.,



கவியோகியின் கைங்கர்யம்

கவியோகியின் காந்தி கிர்த்தனத்தைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும். இந்தப் பதிப்பின் லாபம் திருவல்லிக்கேணி மஹாத்மாஜி ஸேவா சங்கத்தின் மாணவர் இலவசச் சம்பள நிதிக்கு நன்கொடையாக வழங்கப்படுவதால், உங்கள் நண்பர்களையும் இந்நூலை வாங்கி இப் புண்யகைங்கரியத்தை ஆதரிக்கச் செய்யவும். கிளேஸ் பதிப்பு. 352 பக்கங்கள். அழகிய மேலட்டை ரூ. 3-8-0.